www.padippakam.com

# தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் பாதை எது?

நா. சண்முகதாசன்

படிப்பகம்

www.padippakam.com

A Z 4101

# பதிப்புரை

இந்நாட்டில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள இன, மொழி, கல்வி, வேலை, பிரதேசம் போன்ற பிரச்சினைகள் கடந்த காலங்களை விட தேசம் முழுவதும் எதிர் நோக்கியுள்ள பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளன.

எமது நாட்டின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இனவாதிகள், பிற்போக்கு வாதிகள், பாராளுமன்ற வாதிகள் ஆகியோர் முன்வைத்த தீர்வுகள் யாவும் தமிழ் மக்களை திருப்திப் படுத்தவும் இல்லை, தீர்வு ஏற்படுத்தவும் இல்லை. கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் இன-மொழி ரீதியில் துவேசங்களைத் தூண்டும் வகையிலும், அதன் பின்னால் தமது உயர் வர்க்க நலன் காக்கும் நோக்குடன் பாராளுமன்றத்தின் அடிப்படையிலும் இயங்கி வந்த தமிழ்த் தலைவர்களின் மீது தமிழ்ப் பேசும் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். தம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றப் பாதையோ அல்லது அகிம்சைப் பாதையோ வழி காட்டாது என்பதை தமிழ் மக்கள் நடைமுறையின் மூலம் கண்டுள்ளனர். இதனால் வேறு மார்க்கங்கள் தேட வேண்டிய ஒரு சூழ்நிலைக்கும் வந்துள்ளனர். இவ்வேளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான சரியான தீர்வை முன் வைத்து வருகின்றது.

உலகிலேயே தேசிய இனப் பிரச்சினைக்கான சரியான தீர்வை முன் வைத்தவர்களும், அதை நடைமுறைப் படுத்தி வெற்றி கண்டவர்களும் மாக்சிச-லெனினிச வாதிகள் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். இனப் பிரச்சினைக்கும், ஏனைய பிரச்சினைகளுக்கும் மாக்சிசம்-லெனினிசம்-மா ஓ சேதுங் சிந்தனை காட்டும் புரட்சிகர வழி முறைகள் மட்டும் தான் சரியான பரிகாரம் என்பதை தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக வாலிபர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மூலம் ஏற்றுக் கொள்ளும் ஒரு சூழ் நிலை உருவாகி வருகின்றது. இந்நிலையைக் கண்டு பீதி கொண்ட பிற்போக்கு வாதிகளான தமிழ்த் தலைவர்கள் மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மா ஓ ஆகிய தலைவர்களின் சரியான கருத்துக்களை தமது இன வெறிக் கொள்கைக்கு ஏற்றவாறு திரித்தும், சொற்களை மாற்றியும் கூறி வாலிபர்கள் மத்தியில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி தொடர்ந்தும் தமக்குப் பின்னால் இழுத்துச் செல்ல முற்படுகின்றனர்.

எனவே தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளையும் அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களையும் மாக்சிச-லெனினிச-

படிப்பகம்

www.padippakam.com

மாஓ சேதுங் சிந்தனை அடிப்படையில் ஆராய்வதும், அதற்கான தீர்வை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்த முற்படுவதும் தவிர்க்க முடியாத கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலும் வேலை செய்து வருகின்றது. இதன் அடிப்படையிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் **''தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் பாதை எது?** என்ற இப்புத்தகத்தை எழுதியுள்ளார்.

இப்புத்தகம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு குறிப்பாக எதிர்காலத்தை மிக ஆவலுடன் எதிர்நோக்கும் வாலிபர்களுக்கு, சரியான பாதையை தேர்ந்தெடுக்க வழிகாட்டியாக அமையும் என நம்புகின்றோம். இப்புத்தகத்தை எழுதிய தோழர் நா. சண்முகதாசன் இலங்கையில் முதலாளித்துவ பாராளுமன்றப் பாதையை நிராகரித்து தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சிக்கான கொள்கையை முன்வைத்து வேலை செய்து வரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆவர். 1971 ம் ஆண்டு நடைபெற்ற தவறான ஏப்பிரல் கிளர்ச்சியின் போது எக்காரணமுமின்றி பத்து மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அவ்வேளை சிறையில் மாக்சிச - லெனினிச அடிப்படையிலான பல புத்தகங்களை எழுதினார். சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ள அப்புத்தகங்களை தமிழில் வெளியிடும் பொறுப்பை யாழ்ப்பாண பிரசுராலயம் ஏற்றுக் கொண்டுள்ள இவ்வேளை இப்புத்தகத்தை முதலில் வெளியிடுவதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம். எமது வெளியீடுகளுக்கு உங்கள் ஆதரவு என்றும் இருக்கும் என நம்பி இப் புத்தகத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

25-7-76

யாழ்ப்பாண பிரசுராலயம்

* * *

அச்சுப்பதிப்பு:
யாழ்ப்பாண அச்சகம்
93, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

வெளியீடு:
யாழ்ப்பாண பிரசுராலயம்
93, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1·50

படிப்பகம்

www.padippakam.com

# முதலாவது அத்தியாயம்

## வரலாறு

புராதன சரித்திரத்தைத் திரித்துக் கூறுவதின் மூலமாகவே பல தமிழ்ப் பிற்போக்குத் தலைவர்கள், தமிழ் மக்களை உணர்ச்சி வசப் படுத்தி பிழையான பாதைகளில் அழைத்துச் சென்றிருக்கின்றனர். ''தமிழ் மண் காப்போம், தாயகம் மீட்போம்'' என்னும் அர்த்த மற்ற கோஷங்களை முன் வைப்பதன் மூலமாக மக்களை உணர்ச்சி வசப் படுத்துகின்றனர்.

ஆனபடியினால்தான் புராதன சரித்திரத்தை ஓரளவாயினும் புரிந்து கொள்வது இன்றைய தமிழர்களின் நிலைமையைத் தெரிந்து கொள்வ தற்கும், வருங்காலத்தை நிர்ணயிப்பதற்கும் உதவியாய் இருக்கும்.

இன்றைய தவறான கோஷங்களுக்கு நியாயம் தேடுவதற்காக இலங்கையின் சரித்திரத்தையே தமிழர் கூட்டணித் தலைவர்கள் திரித் துக் கூறுகின்றனர். விஜயன் கி. மு. 6வது நூற்றாண்டில் வந்து இறங்க முன்னரே இலங்கையில் தமிழர்கள் வசித்தனர் என்றும், இராவணன் ஒரு தமிழன் என்றும் கட்டுக் கதைகளை பரப்பி விடுகின்றனர். இரா மாயணம் மகாவம்சத்தைப் போல் ஒரு சரித்திரக் கதையல்ல. அக் கதையில் இடம் பெறும் இராமன், சீதை, இராவணன் போன்றவர் கள் உண்மையாகவே சரித்திரத்தில் வாழ்ந்தவர்கள் என்பதற்கு ஒரு சான்றுமில்லை. இதே போன்று ''ஓடிசிய'' என்றொரு கதை கிரேக்க நாட்டிலும் ஹோமர் என்ற பிரபல எழுத்தாளரால் எழுதப்பட்டுள் ளது. ஆகையால் இவைகளைச் சரித்திரமாக எடுத்துக் கொள்ள முடியாது.

விஜயனுக்கு முன் இலங்கையில் தமிழர் வாழ்ந்தனர் என்பதற்கு ஒரு சான்றும் இல்லை. விஜயன் என்றவன்தான் இலங்கைக்கு வந் தான் என்பதற்கும் ஒரு சான்றும் இல்லை. இந்தியாவிலிருந்து கி. மு. 6-ம் நூற்றாண்டில் சிலர் இலங்கையில் வந்து குடியேறினார்கள் என் பதை மட்டுமே நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியும்.

கி. பி. 412-ல் இலங்கை வந்திருந்த புகழ்பெற்ற சீன யாத்திரிக ஞன பாகியன் பின்வருமாறு கூறுகின்றார். ''இலங்கையில் முன்னர்

படிப்பகம்

www.padippakam.com

மக்கள் வாழவில்லை. பிசாசுகள்தான் வசித்தன. பல் நாட்டு வணிகர்கள் இங்கு வர்த்தகம் செய்ய வந்தார்கள். வியாபாரத்தின்போது பிசாசுகள் நேரே தோன்றவில்லை. தமது மதிப்பிடற்கரிய பண்டங்களின் பெறுமதியைப் பொறித்து மாத்திரம் காட்டின. அப்பொழுது வர்த்தகர்கள் பொறிக்கப்பட்ட விலைகளின் பிரகாரம் பொருட்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் சென்றார்கள். ஆனால் இந்த வருகைகளின் விளைவாக இதர நாட்டு ஆட்கள் இந்த மக்களின் சந்தோஷமான இயல்பை அறிந்து பெருந் தொகையாக இங்கு வந்தார்கள். இவ்வாறு ஒரு பெரும் இராச்சியம் உருவாகியது.'' இலங்கையில் முன் வாழ்ந்த மக்கள் இந்த நாட்டின் மீது பின்னர் படையெடுத்து வந்த இந்தோ ஆரியர்களிலும் பார்க்க நாகரிகம் குறைந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதே மேற்கூறிய விபரத்தின் அர்த்தம்.

இலங்கையை இந்தியாவிலிருந்து பிரிக்கும் மிகக் குறுகிய தூரம் 20 மைல்கள் ஆனபடியால் காலத்துக்குக் காலம் இந்தியாவிலிருந்து இலங்கைமேல் ஆக்கிரமிப்புப் படையெடுப்பு நடைபெற்றது என்பதைப் பற்றி ஒருவித ஐயமும் இல்லை. சரித்திர ரீதியாக இலங்கையை முதன் முதலாக ஆண்ட தமிழ் அரசன் எல்லாளனே. அதற்கு முன்னரேயே புத்த சமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. புத்த சமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டபொழுது இலங்கையை ஆண்டவர்கள் சிங்கள அரசர்கள் என்பதைப் பற்றி ஐயமில்லை. ஆனபடியினால் அதற்குப் பின் இலங்கையைக் கைப்பற்றிய அரசன் தென்னிந்தியாவிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளனாகத்தான் இருக்க வேண்டும். அவன் ஈழத்துத் தமிழ் மன்னனாக இருந்திருக்க முடியாது. அவனைத் தோற்கடித்து இலங்கையை மீண்டும் விடுதலை செய்தவன் சிங்கள அரசனாகிய துட்டகெமுனு என்பவனே.

இதற்குப்பின் ஆயிரம் வருடங்களுக்கு ஒரு தமிழ் அரசனும் இலங்கையை ஆளவில்லை. கி. பி. 11-வது நூற்றுண்டில் சோழர்கள் இலங்கைக்கு எதிராகப் படையெடுத்து, அரை நூற்றுண்டுகாலம் இத் தேசத்தை ஆண்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. அக்காலம்தான் சேர சோழ பாண்டிய இராச்சியங்கள் சிறந்து விளங்கிய காலமாகும். தென்னிந்திய அதிகாரத்துக்காக அப்பொழுது இவர்கள் மத்தியில் போட்டி நடைபெற்றது. சிங்கள இராச்சியமும் இப்பிரதேசத்தில் அதிகாரத்துக்கான நாலாவது இராச்சியமானது.

தென்னிந்திய, இலங்கை நிலப்பிரபுத்துவ இளவரசர்களுக்கிடையில் நடைபெற்ற இந்த யுத்தங்கள் பிரஞ்சு, ஆங்கில நிலப்பிரபுக்களுக்கிடையில் நடைபெற்ற நூற்றுண்டு யுத்தம் போன்ற யுத்தங்களை ஒத்தவையாகும். இந்த யுத்தங்கள் ஒரு தேசத்துக்கும், இன்னொரு தேசத்துக்குமிடையில் நடந்த யுத்தங்களல்ல. நிலப்பிரபுத்துவ இளவரசர்களுக்கிடையில் நடைபெற்ற யுத்தங்களுக்கு தேசிய உணர்வுகளை ஊட்டு



படிப்பகம்

www.padippakam.com

வது பிற்கால நோக்கத்துக்கான இனவெறியைக் கிளப்பி விடுவதற்காக ஆகும்.

நிலப்பிரபுத்துவ முறையின் கீழ், ஒரு சிங்கள நிலப்பிரபுத்துவ மன்னர் அல்லது நிலப்பிரபு சிங்களப் பண்ணை அடிமை அல்லது விவசாயியிலும் பார்க்க தமிழ் மன்னர் அல்லது தமிழ் நிலப் பிரபுவுக்கு நெருங்கியவராக இருந்தார். அவர்களைப் பொறுத்தவரையில் இனம் அல்லது மொழி முக்கியத்துவம் அற்றதாக இருந்தது. நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் ஒருவரின் அந்தஸ்துத்தான் முக்கியமானது. இதனால்தான் பல சிங்கள மன்னர்கள் தென்னிந்திய ராணிகளை திருமணம் செய்திருந்தார்கள். சிங்கள மன்னர்களில் மிகவும் மகத்தானவர்கள் என்று கருதப்படும் முதலாவது பராக்கிரமபாகுவைக் கூட சிங்களவன் என்று அழைக்க முடியாது. அவனுடைய தகப்பனார் ஒரு பாண்டிய இளவரசர். தாயார் மட்டுமே ஒரு சிங்களவர். தாயாருடைய தகப்பனாரும் ஒரு சிங்களவரல்ல. அக்காலத்தில் சிங்களவர்கள் தாய் வழி வாரிசு முறையை பின்பற்றிய படியால்தான் பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறுவதை விரும்பினார்கள்.

அதேபோல 6வது பராக்கிரமபாகுவிற்கு, யாழ்ப்பாணத்தில் அன்றிருந்த தமிழ் இராச்சியத்தை அடக்கி வெற்றி பெற்றுக் கொடுத்தவர் அவருடைய தமிழ் சேனாதிபதியான சப்புமால் இளவரசரே. இவர் யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த காலத்தில்தான் நல்லூர் கந்தசாமி கோவிலைக் கட்டினார் என்று கூறப்படுகின்றது. இறுதியில் 6-வது பராக்கிரமபாகுவின் மகளைத் திருமணம் செய்து, யாழ்ப்பாணம் உட்பட முழு இலங்கையையும் 7-வது புவனேகபாகு எனப் பெயர் பூண்டு அவரே அரசாண்டார்.

இதேபோல இலங்கையின் இடைக்கால மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தார்கள், இது படையெடுப்பால் நடந்ததல்ல. கண்டிப் பிரதானிகளின் முடிவொன்றினால் ஏற்பட்டது. சிங்கள நிலப் பிரபுத்துவ மன்னர்களும் தென்னிந்திய நிலப்பிரபுத்துவ மன்னர்களும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாகவும், அநேகமாக ஒருவருக் கொருவர் இனத்தவராகவும், ஒரே அரச குடும்பத்திலிருந்து, வழிவந்தவர்களாகவும் இருந்தனர்.

சிங்களவர்களின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை தமிழன் என்று கூறுவது தவறு. அவன் கண்டிப் பிரதானியான பிலிமத்தலாவுக்கு ஆந்திர தேசத்திலிருந்து வந்த ஒரு இளவரசிக்குப் பிறந்த மகன். ஆனால் அவனுடைய அரச சபை மொழி தமிழாக இருந்தது. 1815-ம் வருடம் வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியபோது கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தில், கெப்பிட்டிபொல தவிர, ஏனைய கண்டிப் பிரபுக்கள் அனைவ



படிப்பகம்

www.padippakam.com

ரும் தமிழில்தான் கைச்சாத்திட்டார்கள். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மூதாதையரான ரத்வத்தை திசாவவும் தமிழில் 'றத்வத்த' என்றே கைச்சாத்திட்டிருக்கின்றார். மொழிப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதில்லை. சிங்கள, தமிழ்ப் பிரபுக்கள் சாதாரண மக்களுக் கெதிராக, பெரும்பாலும் விவசாயிகளுக்கு எதிராக நிலப் பிரபுத்துவ உறவுகளால் ஐக்கியப்பட்டிருந்தார்கள்.

இந்தியாவையும், இலங்கையையும் பிரித்துவைத்திருக்கும் நோக்கத்துக்காகவும், இலங்கையில் சிங்களவர்களையும், தமிழர்களையும் பிரித்து வைத்திருக்கும் நோக்கத்துக்காகவும், இந்த நிலப்பிரபுத்துவப் போட்டிகளை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்தான் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையிலான தேசியப் பகைமையாகத் தோன்றச் செய்தனர். இந்த விஷயத்தில் அவர்களுக்கு இருதரப்பிலுமுள்ள உள்ளூர் இன வெறியர்களின் ஆதரவு பெருமளவிற்கு வெற்றி ஈட்டிக் கொடுத்தது.

தென்னிந்திய மன்னர்களுக்கும், சிங்கள மன்னர்களுக்குமிடையில் தொடர்ச்சியான யுத்தங்கள் நடைபெற்றதுபோல சிங்கள சிம்மாசன போட்டியாளர்களுக்கிடையிலும் இடைவிடா உள்நாட்டு யுத்தங்கள் நடைபெற்றன. இந்தத் தொடர்ச்சியான யுத்தங்களின் விளைவு இலங்கையின் வடபகுதியில் தமிழ் இராச்சியம் ஒன்று தோன்றியதாகும். இவ்வித இராச்சியம் 14, 15வது நூற்றாண்டில் உருவாகியிருப்பதாக சரித்திர ரீதியில் தெரிய வருகின்றது. இதை ஆண்டு வந்தவர்கள் ஆரியச் சக்கரவர்த்திகளாவர். 1412-ம் ஆண்டு தொடக்கம் 1467-ம் ஆண்டு வரையும் இலங்கையை ஆண்டுவந்த 6-வது பராக்கிரமபாகு, தன்னுடைய தமிழ்ச் சேனாதிபதியின் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்தை அடக்கி சிங்கள இராச்சியத்துடன் இணைத்ததை, ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். ஆனால் அவர்கள் திரும்பவும் சிங்கள ஆட்சியிலிருந்து விடுபட்டு, 1505-ம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பொழுது யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் இராச்சியம் இருந்ததாகத் தெரிய வருகின்றது. இந்த இராச்சியத்தை போர்த்துக்கேயர் அடக்கி ஆண்டதற்குப்பின் இலங்கையின் எப் பகுதியிலும் தமிழர் இராச்சியம் இருக்கவில்லை என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இந்த சரித்திர உண்மையிலிருந்து மற்றோர் உண்மையை இவ்விடத்தில் விவாதிக்க வேண்டும். தமிழர்களை உணர்ச்சிவசப்படுத்த எத்தனிக்கும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் எப்பொழுதுமே இலங்கையில் ஒரு தமிழ் இராச்சியம் இருந்து வந்ததென்றும், ஐரோப்பியர் வருமுன் தமிழன் தமிழனையே ஆண்டு வந்தானென்றும் தமது பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். சிலர் இதற்கு மேலாகச் சென்று, இலங்கையின் உண்மையான பெயர் ஈழம் என்றும், ஒரு



படிப்பகம்

www.padippakam.com

காலத்தில் முழு ஈழத்தையும் தமிழர்கள்தான் ஆண்டுவந்தார்களென்றும், கூறிவருகின்றனர். இக்கூற்று ஒன்றுக்கும் ஒருவித சரித்திர ஆதாரங்களுமே கிடையாது. ஓரிருமுறை இலங்கையை சிறிது காலத்துக்கு தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாக ஆண்டுவந்திருந்தும், கி. மு. 6-வது நூற்றாண்டிலிருந்து, சிங்களவர்களே இலங்கையை ஆண்டு வந்தார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. மேலும் இன்றைக்கு இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் பெரும்பாலாக வாழ்ந்துவரும் தமிழர்களின் நியாயமான கோரிக்கையை வலியுறுத்துவதற்கு இலங்கை சிங்கள நாடல்ல, தமிழ் நாடென்று வாதாடத் தேவையில்லை. சென்ற 500 வருட காலத்துக்கு தமிழர்கள் வடக்கு கிழக்கு இலங்கையை தங்களுடைய பாரம்பரிய தாயகமாக கருதி வாழ்ந்து வந்தார்கள் என்பதை எவரும் ஒத்துக் கொள்வர். இதன் காரணமாக இவர்களுக்கு விசேஷ உரிமைகள் இருக்கின்றன என்பதையும் ஒத்துக் கொள்வோம். ஆனால் ''தமிழ் மண்ணைக் காப்போம், தாயகம் மீட்போம்'' என்னும் அர்த்தமற்ற கோஷங்களால், தமிழர் கூட்டணித் தலைவர்கள் இனத் துவேஷத்தையே வளர்க்கின்றனர்.

எங்களுடைய கருத்துக்கு இன்னுமொரு அத்தாட்சியையும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். இன்றைக்கு தமிழ் பேசும் மக்களின் அமோக மதிப்பைப் பெற்ற மகாகவி சுப்ரமணிய பாரதியார் ''பாரத தேசம்'' என்னும் கவிதையில் இலங்கையைப் பற்றி பாடியுள்ளார். அப்போது இலங்கையைச் சிங்களத்தீவு என்றே அழைக்கின்றார். ''சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்.''

இதே கருத்தை ''செந்தமிழ் நாடு'' என்னும் கவிதையிலும் எடுத்துரைக்கின்றார்.

> ''சிங்களம் புட்பகம் சாவக - மாதிய
> தீவுபலவினுஞ் சென்றேறி - அங்கு
> தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் - நின்று
> சால்புறக் கண்டவர் தாய்நாடு.''

இதில் பாரதியார், சேர, சோழ, பாண்டியர் இலங்கைக்கு எதிராகப் படை எடுத்த வரலாற்றைப் பற்றியே கூறுகிறார்.

தமிழ் மண் என்ற கோஷத்தைக் கிளப்புவோரிடம் ஒரு கேள்வியை கேட்கின்றோம். இலங்கை மண் முழுவதையுமே வெள்ளைக்கார ஏகாதிபத்திய வாதிகள் தங்கள் கால்களுக்குக் கீழ் அடக்கி வைத்திருந்த காலத்தில் தமிழ் மண்ணைக் காப்பதற்கும் தாய் நாட்டை மீட்பதற்கும் ஏன் இன்றைய தமிழ் ''வீரர்கள்'' முன்வரவில்லை? ஜீ. ஜீ. பொன்னம்பலமோ, எஸ். ஜே. வி. செல்வநாயகமோ அல்லது அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

பிற்கால வழித்தோன்றல்களோ இந்தக் கோஷத்தை ஒரு தடவையாவது கிளப்பினார்களா? அதற்குப் பதிலாக, சோல்பரிக் கொமிஷனுக்கு முன்னால் சாட்சியம் அளித்தபொழுது, பத்து வருடத்துக்கு ஒருமுறை தமிழர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா என்று பரிசோதிக்க வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் ஒரு கொமிசனை அனுப்ப வேண்டும் என்று மண்டியிடவில்லையா? திரு. பண்டாரநாயக்கா திருக்கோணமலையிலிருந்து ஏகாதிபத்திய தளங்களை வெளியேற்றியபொழுது, அன்றைய தமிழரசுக் கட்சித் தலைவராக இருந்த காலம் சென்ற நாகநாதன், அத்தளங்களிலிருந்து வாபஸ் வாங்க வேண்டாமென்று, 'மாட்சிமை தங்கிய' மகாராணிக்குத் தந்தியனுப்பவில்லையா? தமிழ் மண் மீது இன்றிருக்கும் பற்று அன்று எங்கு போயிற்று?

இன்றைய தமிழர் கூட்டணித் தலைவர்கள் அன்று அந்நிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக இலங்கையில் குரல் எழுப்பாதது மட்டுமல்ல; ஏனைய நாடுகளில் நடக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. உதாரணமாக, அண்மையில் கம்போடிய, வியத்நாம், லாஓஸ் மக்கள் உலகம் போற்றும் வெற்றியை தங்களின் விடுதலைப் போராட்டத்தினால் வென்ற பொழுது, ''சுதந்திரன்'' கிளப்பிய ஒரே ஒரு கேள்வி: தென் வியத்நாமில் சுரண்டல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழ் வியாபாரிகளுக்கும் வட்டிக் கடைக்காரருக்கும் என்ன நடந்ததென்பதே!

சிங்கள மண்ணிலிருந்தும், தமிழ் மண்ணிலிருந்தும் 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தை கிளப்பிய பெருமை கம்யூனிஸ்ட்டுகளாகிய எங்களுக்கே சாரும்.



படிப்பகம்

www.padippakam.com

## இரண்டாம் அத்தியாயம்

# வகுப்புவாதம் தலைதூக்கிய வரலாறு

அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் கொடுங்கோலாட்சியின் கீழ் சிங்களவர்களும், தமிழர்களும் ஒருவிதமாகவே அடக்கியாளப்பட்டனர். சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலும், இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் சில அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது மூலமாக, அடிமைத் தனத்துக்கு, அடிமைகளின் ஆதரவைப் பெற முயற்சித்தார்கள். இந்த அரசியல் சீர்திருத்தங்களைப் பெற நடத்தப்பட்ட இயக்கங்களில் தமிழ் நிலப் பிரபுத்துவ தலைவர்களான பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன் போன்றவர்கள் சிங்கள நிலப் பிரபுத்துவ தலைவர்களான ஜேம்ஸ் பீரிஸ், ஈ. டபிள்யூ. பெரேரா போன்றோர்கள் இன வித்தியாசமின்றி ஒற்றுமையாக நின்று போராடினார்கள்.

1915-ம் ஆண்டில் இராணுவச் சட்டத்தின் கீழ் சிங்களத் தலைவர்கள் சிறைவைக்கப்பட்ட காலத்தில், நீர்மூழ்கிகள் நிறைந்த கடல்களின் ஆபத்தைப் பொருட்படுத்தாமல், இலண்டனுக்கு பிரிட்டனின் அதிகார வட்டாரங்களுடன் இச் சிங்களத் தலைவர்களின் சார்பில் வாதாடச் சென்றவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே! சிங்கள வாக்காளர்கள் பெரும்பான்மையாக இருந்த அக்காலத்துச் சட்டசபையின் கல்விகற்ற இலங்கையின் தொகுதிக்கான தேர்தல்களில் முறையே சேர். மார்க்கஸ் பர்ணாந்தோவையும், எஸ். டபிள்யூ. ஜெயவர்தனாவையும் இரண்டு தடவை தோற்கடித்தவர் இதே இராமநாதன்தான். அவரின் சகோதரர் பொன்னம்பலம் அருணாசலம் கூடிய அரசியல் சீர்திருத்தங்கள் கோரி இயக்கம் நடாத்திய இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது எதைக் காட்டுகின்றதெனில், இக் காலகட்டத்தில், தமிழ் தலைவர்களும், சிங்கள தலைவர்களும் ஒருமித்து நின்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து கூடிய அரசியல் சீர்திருத்தங்களைக் கோரினர் என்பதேயாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்பொழுது, இந்த ஒற்றுமை எவ்விதம் முறிந்தது என்பதைக் கவனிப்போம். கபடத்தனமான வெள்ளைக்கார ஏகாதிபத்திய அரசு வழங்கிய அதிகாரப் பகுதிகளை எப்படிப் பங்குபோடுவது என்பதுபற்றி சிங்கள, தமிழ் தலைவர்கள் உடன்பாட்டுக்கு வர முடியாமையே இதற்குக் காரணம். பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைத் தலைவர்கள் மத்தியில் பிணக்கை ஏற்படுத்தும் 'அரசியல் சீர்திருத்தம்' என்ற பொருளை வீசியெறிந்து விட்டது.

மேற்கு மாகாணத்துக்கு தனியான தமிழ் ஆசனமொன்று வேண்டுமென இலங்கைத் தமிழ் தலைவர்கள் வேண்டுகோள் விட்டதே இப்பிணக்குக்குக் காரணம். அது ஒரு வகுப்புவாதக் கோரிக்கை என்று காரணம் காட்டி, சிங்களத் தலைவர்கள் இக் கோரிக்கையை நிராகரித்தனர். சிங்களத் தலைவர்கள் பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கையை முன்வைத்து அது வகுப்புவாதமற்ற கோரிக்கை என்று கூறினர்கள். உண்மையில் இரண்டு கோரிக்கைகளும் வேறுபட்ட அளவில் வகுப்புவாதமானவையே. பெரும்பான்மையினரைப் பொறுத்தவரையில், பிரதேச ரீதியிலான பிரதிநிதித்துவத்தினல் அவர்களுடைய பெருந்தொகையான உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சிறுபான்மையினரைப் பொறுத்தவரை இனரீதியிலான பிரதிநிதித்துவத்தினல் அவர்களுடைய இனத்திலிருந்து கூடுதலான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த இரண்டு நிலைப்பாடுகளினதும் சாதகங்களை மதிப்பிடுவது சாத்தியமில்லை. பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் ஒற்றுமைப்பட்டு பொது எதிரிக்கும், அடக்குமுறையாளனுக்கும் எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதே இரு பகுதியினருக்கும், பயன் கொடுக்கக் கூடியது என்று மட்டும் குறிப்பிட முடியும். ஆனல் இந்த அடிப்படை விவேகம் இரு பகுதியினர் மத்தியிலும் இருக்கவில்லை. இதனல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள்தான் வெற்றி கண்டனர். சாதி, இன, மத அடிப்படையில் இலங்கையர்கள், இலங்கையருக்கு எதிராகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த வேளையில் அந்நிய ஏகாதிபத்திய வாதிகள் எல்லோருக்கும் மேல் குதிரை விட்டார்கள்.

இப்படி நிலப்பிரபுத்துவ சிங்கள, தமிழ்த் தலைவர்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழர் மத்தியில் அக்காலத்தில் புரட்சிகரமான ஒரு இயக்கம் உருவானதைப்பற்றி மகிழ்ச்சியுடன் எடுத்துக் காட்ட விரும்புகின்றேம். அண்டை உபகண்டத்தில் எழுந்திருந்த புரட்சிகரமான தேசிய சுதந்திர இயக்கத்தின் பாதிப்பால் போலும், டொனமூர் சட்ட திட்டம் உண்மையான சுதந்திரத்தை இலங்கைக்கு அளிக்கவில்லையென்று விமர்சிக்கும் இயக்கமொன்று இலங்கையில் எழுந்தது. இதுதான் வாலிபர் காங்கிரஸ் என்னும் ஸ்தாபனமாகும். புதிய அரசியல் சட்ட திட்டத்தின் கீழ் நடத்தப்படவிருந்த தேர்தல்களை



படிப்பகம்

www.padippakam.com

பகிஷ்கரிக்கும்படி அவ்வியக்கம் அறைகூவல் விடுத்தது. தெற்கிலிருந்தும் ஆதரவு கிடைக்குமென வாக்குறுதியளிக்கப்பட்ட பொழுதிலும் வடமாகாணத்தில் மாத்திரம்தான் இந்த இயக்கம் வெற்றி கண்டது. வடமாகாணத்திலுள்ள நான்கு ஆசனங்களுக்கான தேர்தல்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. வடமாகாணத் தமிழர்கள் முதலாவது சட்ட சபையில் நான்கு ஆண்டுகளாக பிரதிநிதித்துவமின்றியிருந்தனர்.

அன்றைய காலத்தில் வாலிபர் காங்கிரஸ் ஒரு முற்போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாதமற்ற ஸ்தாபனமாக விளங்கிற்று. ஆனால் வெகுகாலம் செல்லுமுன் ஜீ. ஜீ. பொன்னம்பலமும், அவருடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் வட இலங்கையில் கட்டவிழ்த்து விட்ட வகுப்புவாத அரசியல் பிரசாரத்தால் வாலிபர் காங்கிரஸ் செத்து மடிய வேண்டியதாயிற்று.

டொனமூர் திட்டத்துக்கு மேலதிகமான சீர்திருத்தங்கள் வேண்டுமாயின் சட்ட சபையின் மந்திரி சபை ஏகமனதாக இக் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்று பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தனர். இந் நிபந்தனை தமிழர்களுக்கு ஒரு மோசமான நிலையைக் கொண்டுவந்து விட்டது. ஏனென்றால், சிங்கள முதலாளித்துவ தலைவர்கள் மத்தியில் மிகவும் திறமைசாலியானவரும், மிகவும் பிற்போக்கானவருமான டி.எஸ். சேனநாயக்கா சிங்கள தமிழ்த் தலைவர்களின் ஐக்கியத்தின் அடிப்படையில் ஏகமனதான கோரிக்கைகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சர்வ சிங்கள அமைச்சர்களின் சபையொன்றை தெரிவு செய்ததின் மூலம், அதனடிப்படையில் ஏகமனதான கோரிக்கைகளை உருவாக்க எத்தனித்தார். இந்த முயற்சியில் இரண்டாவது சட்டசபைத் தேர்தலின் பின் சர்வ சிங்கள மந்திரி சபை அமைப்பதில் வழி காட்டிக் கொடுத்தவரும் ஒரு தமிழரே. அவர்தான் இன்று தமிழர்கள் மத்தியில் ஐந்து லட்சம் ஒடுக்கப்பட்ட மக்களை சாதி, தீண்டாமையின் பேரால் அடக்குவதில் முன்னின்றவரும், அன்று கொழும்புப் பல்கலைக்கழக கல்லூரியின் கணிதவியல் பேராசிரியராயிருந்த, சேனநாயக்காவின் நண்பனும், ஆலோசகருமான சி. சுந்தரலிங்கம் ஆகும். சர்வ சிங்கள அமைச்சர் சபை உருவாக்கப்பட்டது வகுப்புவாத வேற்றுமைகளை கூர்மையாக்க உதவியது. ஒரு பக்கத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டு, ஐம்பதுக்கு ஐம்பது அல்லது அவர் அழைத்தவாறு, 'சமப் பிரதிநிதித்துவம்' என்ற அவருடைய கூச்சல் இயக்கமும், மறுபக்கத்தில், தெற்கிலே எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கீழ் சிங்கள மகாசபையும் ஸ்தாபிக்கப்பட்டன.

சிங்கள வகுப்புவாதம் தமிழ் வகுப்புவாதத்தால் வளர்ந்தது. அதே போலவே தமிழ் வகுப்பு வாதம் சிங்கள வகுப்புவாதத்தால் போஷிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டது. சிங்களவர்களின் ஐக்கியத்தை ஏற்படுத்தினால்தான் சகல இனங்களினதும் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென்பது பண்டார நாயக்காவின் வாதமாகும். இந்த வாதத்தை பின்னர் ஆர். ஜி. சேன நாயக்கா மீண்டும் கூறியிருக்கின்றார். ஆனால் பதிலளிக்க வேண்டிய கேள்வியொன்று இருக்கின்றது. எதற்காக ஐக்கியம்? வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளனை வெளியேற்றுவதற்கான ஐக்கியமென்றால் அது ஒடுக்கப்பட்ட இனங்கள் அனைத்தினதும் ஐக்கியமாக இருக்க வேண்டும். ஒரு இனத்தின் ஐக்கியமாக மாத்திரம் இருக்க முடியாது. தமிழர்களுக்கெதிரான நோக்குடன், சிங்கள மகாசபை ஸ்தாபிக்கப்பட்டது. இது தான் விஷயம் என்றால் இது ஒரு வகுப்புவாத நடவடிக்கை மட்டுமல்ல பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இலட்சியத்திலிருந்து பின்வாங்கும் நடவடிக்கையுமாகும்.

சிங்கள மக்கள்தான் இலங்கையின் தேசிய இனம் என்று காட்ட முயன்று, இன ரீதியான, மொழி ரீதியான சிறுபான்மையினங்களின் நியாயமான உரிமைகளைப் பொருட்படுத்தாது இருக்கும் இந்தப் போக்கு, சகல முதலாளித்துவ சிங்கள அரசியல் தலைவர்களினதும் பொதுப் பலவீனமாகும். உண்மையில் இடதுசாரிக் கட்சிகள்தான் வகுப்புவாதமற்ற கட்சிகளாக ஒரு காலத்திலிருந்தன. ஆனால் லங்கா சமசமாஜக் கட்சியும், கொமமன் திரிபுவாதக் கும்பலும் 1964-க்குப் பின்னும், மேலும் குறிப்பாக 1970லிருந்து வகுப்புவாதக் கட்சிகளாக மாறிவிட்டன. யு. என். பி., ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி அல்லது கொமமன் திரிபுவாதக் கட்சி—இவற்றில் எந்தக் கட்சியும் தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு ஆசனத்தைப் பெறுவது இலங்கையர் ஒருவர் சந்திரனில் கால் வைப்பது போலாகும். இலங்கை அரசியல் எடுத்துள்ள வகுப்புவாத திசை துக்கமானது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. போட்டியிடும் கோஷ்டிகள் ஒவ்வொன்றும், தங்களில் பரஸ்பர நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க, ஏகாதிபத்திய எஜமானில் கூடுதலான நம்பிக்கை வைத்திருந்தனர். இது திரும்பவும் பிரித்தாளும் ஏகாதிபத்தியக் கொள்கையின் வெற்றியாகும். பிரித்தானியருக்குச் சொந்தமான "ரைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகை அன்று ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையும் அவரது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையையும் முழுதாக ஆதரித்தமை கவனத்திற்குரியது. இலேசான வார்த்தைகளில் கூறின், நூறு அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சபையில் ஐம்பது அங்கத்தவர்கள் சிங்களவர்களையும், ஐம்பது அங்கத்தவர்கள் சிறுபான்மையினங்களைச் சேர்ந்தவர்களாயும் (இலங்கைத் தமிழர்களுக்கு 25, இதர சிறுபான்மையினர்க்கு மிகுதி) இருக்கக் கூடிய முறையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும் என்பது இக் கோரிக்கையின் சாராம்சமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ச் சிறுபான்மையினர் இந்தத் துக்ககரமான போட்டியில் இழ படுபவர்களாயினர். தமிழ்ச் சிறுபான்மையினருக்கு சகலவிதமான வாக்குறுதிகளையும் அளித்தபின்னர் இறுதியில், இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் நிலவிய வேறுபட்ட நிலமைகளில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் சிங்களப் பெரும்பான்மையினருடன் சமரசம் செய்துகொள்ள தீர்மானித்து தமிழர்களைக் கைவிட்டனர். தமிழ்த் தலைவர்கள் சிங்களச் சகோதரர்களுடன் ஒன்று சேர்ந்து தமது பொது ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு எதிராக பொதுக் கோரிக்கைகளை முன் வைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால் இது இரண்டு சமூகத்தினதும் முதலாளித்துவ வர்க்கத் தலைமையில் ஈடுகொடுக்க முடியாத அரசியல் மதியூகமாகும். ஜி. ஜி. பொன்னம்பலம், அவருடைய பிற்கால சீடனான எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர், தமிழர்களை அரசியல் வனாந்தரத்துக்குத் திசை திருப்பிச் சென்ற இருவராக சரித்திரத்தில் இடம் பெறுவர். இப்படிக் கூறும்பொழுது சிங்களவர் மத்தியிலுள்ள வகுப்பு வாதத்தலைவர்களை குற்றமற்றவர்கள் என்று கூற நாங்கள் முயற்சிக்கவில்லை, ஆனால் சிறுபான்மையாக இருந்தபடியாலும், கூடுதலான இழப்பை அடையக் கூடியவர்கள் என்றபடியாலும் தமிழ்த் தலைவர்கள் கூடுதலான பொறுப்புடனும் தூர திருஷ்டியுடனும் இருந்திருக்க வேண்டும்.

இந்த வேளையில் இன்னொரு வெறுப்பூட்டாத அம்சம் தலை தூக்கியது. 1929—1931வது உலகப் பொருளாதார நெருக்கடியின் எதிரொலிப்பு இலங்கையிலும் ஏற்பட்டது. றப்பர் விலை மிகவும் குறைந்தன. பலர் செல்வங்களை இழந்தார்கள். முதல் தடவையாக சிங்களவர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையான பிரச்சினையாயிற்று. வேலையில்லாச் சிங்களவர் முழு வேலை உத்தரவாதம் பெற்ற தோட்டங்களிலுள்ள இந்திய வம்சாவழித் தொழிலாளிகளை பொறாமையுடன் பார்த்தார்கள். இந்த நிலைமையைப் பயன்படுத்தும் பயங்கரமான சாத்தியப்பாடுகளை முதலில் கண்டவர் ஏ. ஈ. குணசிங்கா ஆவர். அவர் இராட்சத உருவமெடுத்த இந்திய எதிர்ப்புப் பிரச்சாரம் ஒன்றைத் துவக்கிவைத்தார். இந்திய வம்சாவழித் தொழிலாளர்களை நாடுகடத்த வேண்டுமென்று இவர் கூறினார். இலங்கை-இந்தியர் பிரச்சினை என்று அழைக்கப்படும் பிரச்சினை தோன்றிவிட்டது. இலங்கையில் வேலை செய்யும் இந்திய வம்சாவழித் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பவேண்டுமென்று கோரும் தீர்மானமொன்று இரண்டாவது சட்டசபையில் விவாதித்து அங்கீகரிக்கப்பட்டது. அந்த வேளையில் சட்ட சபையிலிருந்த இரு சமசமாஜ இரட்டையர்களான என். எம். பெரேராவும், பிலிப் குணவர்த்தனவும், தொழிலாள வர்க்கத்துக்கு தேசிய எல்லைகள் கிடையாது என்ற அவர்களுடைய கட்சியின் உத்தியோக பூர்வமான நிலைமையை பொருட்படுத்தாமல், இந்தத் தீர்மா



படிப்பகம்

www.padippakam.com

னத்துக்காதரவாக வாக்களித்தமை கவனிக்கத்தக்கது. இந்திய எதிர்ப்பு இலங்கை அரசியலின் ஒரு முக்கிய அம்சமாகிவிட்டது. இதனை டி. எஸ். சேனநாயக்கா யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் இடதுசாரி இயக்கத்தைத் தாக்குவதற்கு ஒரு வசதியான ஆயுதமாகப் பாவித்தார்.

இரண்டாம் மகா யுத்தத்துக்கு முன் இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியாவில் அரசாங்கமொன்றை அமைக்க உடன்பட்டபோது ஜவகர் லால் நேரு இலங்கை-இந்தியர் பிரச்சினையை திர்க்கும் முயற்சியில் 1940-ல் இலங்கை வந்தார். அவரால் அந்தப் பிரச்சினையை திர்க்க முடியவில்லை. ஆனால் இலங்கையை விட்டுச் செல்லுமுன் இலங்கையிலுள்ள இந்தியச் சமூகத்தை இலங்கை-இந்தியர் காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனம் அமைக்கும்படி நேரு அவர்களுக்குப் புத்திமதி கூறினார். இது ஒரு மிகவும் பிற்போக்கான, மிகவும் கண்டிக்கத்தக்க புத்திமதியாகும். இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள், இதன் காரணமாக, தமக்கென்று சொந்தத் தனியான ஸ்தாபனங்களை அமைத்து, இத் தவறுன வழியில் இட்டுச் செல்லப்பட்டமையால் இலங்கையின் இடதுசாரி, முற்போக்கு இயக்கத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டனர். இப்படி துண்டித்திருக்காவிட்டால் அவர்கள் சேனநாயக்காவின் சூட்சிக்கு இலகுவில் ஆளாகி இருக்கமாட்டார்கள். சிங்களத் தொழிலாளர்கள் விவசாயிகளிடமிருந்து, அவர்களைப் பிரித்து வைத்து தனிமைப்படுத்துவதற்கான அவருடைய முயற்சிகளுக்கு பலியாகியிருக்க மாட்டார்கள். இது ஒரு பெரிய சோக சம்பவம். அதன் விசாலத்தையும் அளவையும் இன்னும் யாரும் சரியாக மதிப்பிடவில்லை.

இலங்கை இந்தியப் பிரச்சினை முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம், இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 10 லட்சத்துக்குமதிகமான மக்களை சம்மந்தப்படுத்துவதாலல்ல. அது முக்கியம் பெறுவதற்குக் காரணம் இம்மக்களின் பெரும்பான்மையினர் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும் தொகையினராக இருப்பதுடனுமல்லாமல், அவர்கள் இன்றைய இலங்கையின் செழிப்புக்கு பொறுப்பான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் என்பதும் ஆகும். இடதுசாரி இயக்கம் இதனை இக்கண்ணோட்டத்தில் பார்க்காதபோதிலும் டி. எஸ். சேனநாயக்கா அதனைச் சரியாக ஒரு வர்க்கப் பிரச்சினையாகப் பார்த்தாரேயொழிய, அதை தேசிய இனப் பிரச்சினையாக அணுகவில்லை. இந்த இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் பின்னர் புரட்சிகர சக்திகளாக வளரக் கூடியவர்கள். ஆகவே அவர்கள் தம்முடைய எதிரிகள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

1947-ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் தங்கள் ஸ்தாபனமான இலங்கை இந்தியக் காங்கிரசில் இருந்த தொழிலாளர்கள் ஏழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்ததும், இப்பிரதிநிதிகள் யு. என். பி. எதிர்ப்புக் கட்சியினராக இருந்ததும், மற்றும் தொகுதிகளில் பெரும் தொகையான யு. என். பி. எதிர்ப்பு அபேட்சகர்கள்



படிப்பகம்

www.padippakam.com

வெற்றி பெறுவதற்கு இத் தொழிலாளர்கள் உதவியாக இருந்ததும், இவர்களைப்பற்றி டி. எஸ். சேனநாயக்கா கொண்டிருந்த கணிப்பீடு சரியானதென ஊர்ஜிதமாக்கியது. 1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குச் சற்றுப்பின்னர் கண்டியில் நடைபெற்ற உபதேர்தலில் வெற்றிதோல்வியைத் தீர்மானிக்கும் இந்திய தொழிலாளர்களின் வாக்குகள் யு.என்.பி. அபேட்சகரின் தோல்வியையும், திரு. ரி. பி. இலங்கரத்தினவின் வெற்றியையும் ஏற்படுத்தியபோது கடைசி ஆட்டம் நடைபெற்றது. டி.எஸ். சேனநாயக்கா மீண்டும் இது நடைபெறக் கூடாது என்று உறுதி செய்து கொண்டார்.

1948-ல் அவர் பிரஜாவுரிமைச் சட்டங்களைப் புகுத்தினார். அவை இலங்கைப் பிரசையாக விரும்பிய இந்திய, பாகிஸ்தான் வம்சாவழி மக்கள்மீது கடுமையான சோதனைகளை வகுத்தது. இந்தச் சோதனைகள் வகுக்கப்பட்ட விதத்தில் ஒரு சிலர்தான் சித்தியெய்த முடியும். அதே வேளையில் இலங்கைப் பிரசைகளுக்குத்தான் வாக்களிக்கும் உரிமையுண்டென்றும் வகுக்கப்பட்டது. ஒரே அடியில் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் தமது வாக்குரிமை, பிரஜாவுரிமை இரண்டையும் இழந்தார்கள். நாடற்றவர்கள் என்ற மட்டத்துக்கு தள்ளிவிடப்பட்டார்கள். அவர்கள் இலங்கைப் பிரசைகளுமல்ல, இந்தியப் பிரசைகளுமல்ல. அடையாளச் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்துவதைத் தவிர இலங்கை இந்தியன் காங்கிரஸ் எத்தகைய பயன்தரும் ஆட்சேபனையும் தெரிவிக்க முடியவில்லை. எக்காலத்துக்கும் வெட்கம் தரும்முறையில் இடதுசாரி இயக்கம் ஸ்தம்பித்திருந்தது. டி. எஸ். சேனநாயக்கா பிற்போக்குச் சக்திகளின் சார்பில் இரத்தம் சிந்தாத வெற்றியொன்றை பெற்றுவிட்டார்.

இலங்கையில் இந்தியத் துவேஷம் வளருவதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. வெள்ளைக்கார ஏகாதிபத்திய வாதிகள் தமது தோட்டங்களில் வேலை செய்வதற்கு தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவந்தபொழுது, அத்தொழிலாளர்களுடன் சேர்த்து இந்திய வர்த்தகர்களும் வட்டிக்கடைக்காரர்களும் பிற புல்லுருவிகளும் வந்துசேர்ந்தார்கள். அவர்கள் இந்தியர்களையும் இலங்கையர்களையும் வேறுபாடின்றிச் சுரண்டினார்கள். "பிரித்தானிய ஏகாதிபத்தியவாதி சென்றவிடமெங்கும் ஒரு இந்தியனைத் தனது பையில் எடுத்துச் சென்றான்" என்ற பழமொழி ஆபிரிக்காவில் வழங்கி வந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் இது நிச்சயம் உண்மைபோலிருக்கிறது. இந்திய வர்த்தகர்களினதும் வட்டிக்கடைக்காரர்களினதும் கொள்ளையடித்தலும் மனிதத்தன்மையற்ற சுரண்டலும்தான் இந்திய—எதிர்ப்பு உணர்வின் முக்கியமான அடிப்படையாகும்.

ஆனால் இதனைத் துர் அதிஷ்டவசமாக அந்தரங்க நோக்கமுடைய பிற்போக்கு வாதிகள் இந்திய வம்சாவளித் தொழிலாளர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## மூன்றாவது அத்தியாயம்

# வகுப்புவாதம் வலுவடைகிறது

டொனமூர் கமிஷன், சோல்பரி கமிஷன் ஆகியன வகுப்பு வாத ரீதியிலான பிரதிநிதித்துவத்தை அல்லது சிறுபான்மையினருக்கு எந்த வடிவிலும் விசேஷப் பிரதிநிதித்துவத்தை அழிக்க மறுத்தமை சிறுபான்மையினரை நாட்டின் சட்டமியற்றும் ஸ்தாபனங்களில் நிரந்தர சிறுபான்மையினராக வைத்தது. 1935-ல் சர்வ சிங்கள அமைச்சர் சபை உருவானமை, இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகப் பெரிதும் பாகுபாடு காட்டி அவர்களுடைய பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பறித்தெடுத்த பிரஜா உரிமைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை ஆகியனவும் தேசிய பிரச்சினைகளில் தமிழ்ச் சிறுபான்மையினரின் தலைவர்கள் காட்டிய முன் யோசனையற்ற, ஓரளவுக்குப் பொறுப்பற்ற மனோபாவமும் (உதாரணமாக, பிரித்தானிய தளங்களை வெளியேற்றுவதற்கு எதிர்ப்பு, தேசிய தினங்களில் கறுப்புக் கொடி பறக்கவிடுதல்) மேற்கொண்டு வகுப்புவாதப் பகைமைக்குத் துணை புரிந்தன.

இவ்விடத்தில் இக்கால கட்டத்தில் நடந்த இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். 1947-ல் யூ.என்.பி. அரசாங்கத்தை நிறுவிய டீ. எஸ். சேனநாயக்கா, 1948 இன் முடிவுக்குமுன் ஒரு மந்திரிப் பதவியைக் காட்டி தன்னால் இவ்வளவு காலமும் சமாளிக்க முடியாத ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை வென்றெடுத்தார். யாழ்ப்பாணத் தொகுதிக்கு 1947 தேர்தலில் சேனநாயக்காவின் அபேட்சகரான பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன் ஏ. மகாதேவாவை ஜீ. ஜீ. பொன்னம்பலம் தோற்கடித்தார் என்பதை மறக்கக்கூடாது. ஆகவே இந்தக் கூட்டுறவு இரு தரப்பையும் பொறுத்தவரையில் முற்றிலும் சந்தர்ப்பவாதமே. ஆனால் இதனால் தமிழ் காங்கிரஸ் பிளவுபட்டது. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் காங்கிரசை விட்டுச் சென்று தமிழரசுக் கட்சியை அமைத்தார். இக்கட்சி வடக்கில் தொடர்ந்து வகுப்புவாத அரசியலில் ஈடுபட்டது. பொன்னம்பலம் 1970 வரை தன் தொகுதியில் வெற்றிகண்ட போதிலும், தமிழ் காங்கிரஸ் வகுப்புவாதத்தைக் கைவிடாதிருந்த போதிலும், 1948-க்குப் பின் தமிழ் அரசிய



படிப்பகம்

www.padippakam.com

விலோ இலங்கை அரசியலிலோ இவரோ அல்லது இவருடைய கட்சியோ ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கவில்லை. பொன்னம்பலம் தனது ஐம்பதுக்கு ஐம்பது என்ற போராட்டத்தைக் கைவிட்டார். இந்திய வம்சாவளித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா வுரிமைகளையும் பறித்தெடுப்பதற்கான டீ. எஸ். சேனநாயக்காவின் நடவடிக்கைகளை ஆதரிக்கும் அளவுக்குப் பொன்னம்பலம் தனது முந்திய கோட்பாடுகளைக் கைவிட்டார்.

உள்ளே புரையோடிக்கொண்டிருந்த வகுப்புவாதப் புற்றுநோய் 1955-ல் மொழித்தகராறு என்ற வடிவத்தில் வெளியே வந்தது. பண்டாரநாயக்கா இரண்டாவது சட்டசபையில் சீர்திருத்தங்கள் பற்றிய மசோதாவைப் பிரேரித்த காலம் தொடக்கம், அதற்கு முன்னரும்கூட, சகல அரசியல் கட்சிகளும் சிங்களம், தமிழ் இரண்டும் ஆங்கிலத்தின் இடத்தில் உத்தியோக பூர்வமான மொழிகளாக வேண்டுமென்று ஏற்றுக்கொண்டிருந்தனர். சடுதியாக 1955-ல், சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாக இருக்கவேண்டுமென்ற பிரச்சாரம் சிங்களவர் மத்தியில் பரப்பப்பட்டது.

இந்தப் பிரசாரத்தின் ஒரு பிரத்தியேக அம்சத்தை நாம் உடனே கவனிக்க வேண்டும். பல நாடுகளில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் மொழி உரிமைகளையும், பிற உரிமைகளையும் காலில் போட்டு மிதிப்பதற்கு எதிராக அச் சிறுபான்மையினர் நடத்தும் பிரசாரத்தின் வடிவில் வகுப்புவாதப் பிரச்சனை அமைகின்றது. ஆனால் இலங்கையில் பெரும்பான்மைதான் சிறுபான்மை இனத்தின் மொழி தமது மொழியை ஆக்கிரமிக்கும் என்று அஞ்சி அதன் மொழியைப் பாதுகாக்கப் பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்து வைத்தனர். இந்தச் சிக்கலான பிரச்சினையைச் சற்றுப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் சிங்களப் பெரும்பான்மையினரை ஒரு சிறுபான்மையினர் போல் நடந்து செயல்படச் செய்த பிரத்தியேக காரணங்களை ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களவர் உண்மையில் பெரும்பான்மையாக இருக்கும் ஒரு நாட்டில் அவர்கள் சிறுபான்மையினரைப் போல நடந்து கொள்வதற்கான காரணங்கள் பல. முதலாவது காரணம், தென்னிந்தியாவிலிருந்து வந்த புராதன காலத்துத் தமிழ் படையெடுப்புகள் பற்றிய நினைவாகும். இதை மறக்க சிங்களவர்கள் ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை. துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையில் நடந்த சரித்திர முக்கியத்துவம் பெற்ற யுத்தத்தைப் பற்றி எந்தப் பள்ளிப் பையனும் உண்மையை அறியா வண்ணம் திரித்தே சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. அனுராதபுரம் அல்லது பொல்லனறுவையிலுள்ள இடிந்து கிடக்கும் புராதன கட்டிடங்களைப் பார்க்கப் போவோருக்கு அடுத்தடுத்துவந்த



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் படையெடுப்புகளின் காரணமாகவே சிங்கள நாகரிகம் இவ்விதமாக நாசப்படுத்தப்பட்டது என நினைவூட்டப்படுகின்றது.

இரண்டாவதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கடந்த நூற்றாண்டில் தமது பெருந் தோட்டங்களில் வேலை செய்ய சுமார் பத்துலட்சத்திற்கும் மேலான தமிழ்த் தொழிலாளர்களைத் தென் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து அவர்களைக் கண்டிப் பிரதேசத்தின் மையத்தில் கொட்டிக் குவித்தார்கள். இவ்வாறு அவர்கள் வகுப்புவாத சச்சரவுக்கு இன்னொரு காரணமாக இலங்கை-இந்தியர் பிரச்சினையை உருவாக்கினார்கள்.

மூன்றாவதாக கிறிஸ்தவ மிஷனரிமாரின் நடவடிக்கை காரணமாகவும், வடக்கிலுள்ள தமிழர்களுக்குக் கிடைத்த கூடுதலான கல்வி வசதியினால் தமிழர்கள் தமது ஜனத்தொகை விகிதாசாரத்திற்குக் கூடுதலான அரசாங்க உத்தியோகங்களையும் (டாக்டர், நியாயவாதி முதலிய) உயர் பதவிகளையும் பெற்றுக் கொண்டார்கள். 1929—31 உலகப் பொருளாதார நெருக்கடிக்குப் பின் சிங்கள மத்திய தர வர்க்கத்தினர் மத்தியில் வேலையின்மை கடுமையான பிரச்சினையாகி வேலைக்காக அவர்கள் அரசாங்க சேவையை நோக்கித் திரும்ப ஆரம்பித்தபோது தமிழர்கள் ஏற்கனவே அங்கு அரண் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

பொருளாதாரப் பிரச்சினைகள் மொழி நெருக்கடியின் அடிப்படையாக இருந்தன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். 1956க்கு முன் ஆங்கில மொழி அறிவு அரசாங்க சேவைக்கு அனுமதிப் பத்திரமாக விளங்கியது. இதனால் தமிழர்கள் சிங்களவர்களுடன் சமமான அடிப்படையில் அல்லது சிங்களவர்களிலும் சிறப்பான நிலைமைகளில் போட்டிபோட முடிந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டு சிங்களவர்கள், சிங்களம் மாத்திரம் உத்தியோகபூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என விரும்பினார்கள். அப்பொழுது அவர்களுக்கு அரசாங்க சேவையில் வேலை பெற நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் மயமாகாத இலங்கையில் அரசாங்கம் மிகப் பெரிய தனியொரு முதலாளி மாத்திரமல்ல, அரசாங்க சேவைதான் மிகவும் லாபமான தொழிலாகும். மொழிப் போர் என்பது உண்மையில் முறையே ஒவ்வொரு மொழியைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத்தினர் அரசாங்க உத்தியோகத்துக்காக நடத்தும் போராட்டமாகும். இதனால்தான் பொருளாதாரப் பரிகாரம் தவிர வேறெந்தப் பரிகாரமும் நிரந்தரமான தீர்வுகளை ஏற்படுத்த முடியாது.

நான்காவதாக, பாக்குநீரிணைக்கு அப்பால் நாலு கோடிக்கு மேலான மக்களுடைய பேசும் மொழியாக தமிழ் இருக்கின்றது. இது



படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவிலிருந்து கலாச்சார ஆக்கிரமிப்பு ஏற்படுமென்ற அச்சத்தை உண்டாக்குகிறது.

ஐந்தாவதாக சிங்களத்திலும் பார்க்க தமிழ் பழைய மொழியாகவும் வளர்ந்த மொழியாகவும் திகழ்கின்றது. இது சிங்களவர்கள் மத்தியில் ஒரு தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இந்தச் சரித்திர உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் இலங்கையின் மொழிப் பிரச்சினையின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியாது. இவ்விடத்தில் இன்னொரு விஷயத்தையும் கூறாமல் இருக்க முடியாது. கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பாக, தூர திருஷ்டியாக இப்பிரச்சினையை அணுகிய தமிழ்க் கல்விமான்கள் புத்த குருமாரை தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் அமர்த்தி தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் கற்றுக் கொடுத்தனர். மிகவும் வரவேற்கத்தக்க இந்த முயற்சியை நீடித்துச் செய்திருந்தால் மொழிப் பிரச்சினை இன்றைய நிலையை அடைந்திருக்காது. ஆனால் தமிழரசுக் கட்சியின் அரசியல் தலையீட்டுக் காரணமாக இந் நன் முயற்சி தடைசெய்யப்பட்டு, நிறுத்தப்பட்டது. ஆனால் தமிழரசுக் கட்சியின் பெரிய தலைவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பித்து அதன் மூலமாக அரசாங்கத்தில் பெரிய உத்தியோகமும் பெற்றுக் கொடுத்தனர்.

அந்நியனின் மொழியை அன்றும் இன்றும் பெருமையுடன் கற்றவர்கள் அதனையே தமது வீட்டு மொழியாகப் பேசுபவர்கள் தங்கள் நாட்டில் வசிக்கும் இன்னொரு இனத்தின் மொழியை கற்பது தங்களுடைய தன் மதிப்பிற்கு பங்கம் விளைக்குமென்று இன்று வாதாடுகின்றனர்.

எம். ஈ. பி.யின் வெற்றிக்குப் பின் பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தைகள் மூலம் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க பாரதூரமான முயற்சி ஒன்றை மேற்கொண்டார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவுதான் பிரசித்தி பெற்ற பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தமாகும். இலங்கை முழுவதற்கும் சிங்களம் உத்தியோக பூர்வமான மொழி என்பதை ஏற்றுக் கொள்ளும் புதிய நிலைமையின் கீழ் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மொழிக்கும் சில பாதுகாப்புக்கான சில சரத்துக்களை அது ஏற்றுக் கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றங்கள் பற்றிய சிக்கலான பிரச்சினைக்கு அது சில சமரசங்களைக் கண்டது.

இந்த இடத்தில் வகுப்புவாத பிரச்சினைக்கும் குடியேற்றத்திற்கும் இடையிலுள்ள உறவைப்பற்றி சற்றுக் குறிப்பிடுவது அவசியம். 1935ல்



படிப்பகம்

www.padippakam.com

டொனிக் கமிஷன் அறிக்கைக்குப் பின் டி. எஸ். சேனநாயக்கா தனது குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தபோது, இவற்றில் பல குடியேற்றத் திட்டங்கள் வரண்ட பிரதேசத்தில் அமைந்திருந்தன. ஆரம்பத்தில் அநேக குடியேற்றத் திட்டங்கள் வட மத்திய மாகாணத்தில் இருந்தன. ஆனால் சில குடியேற்றத் திட்டங்கள் தமிழருடைய பாரம்பரிய பிரதேசங்களான அல்லது தமது பாரம்பரிய பிரதேசங்கள் என்று அழைக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டன. (முழுத் தீவும் ஒரு காலத்தில் சிங்களவருக்குச் சொந்தமாக இருந்தது உண்மையே. ஆனால் நாம் கடந்த 4—5 நூற்றாண்டுக் காலத்தை எடுத்துப் பார்ப்போமென்றால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாம் வசித்து வந்தார்கள் என்று தமிழர் கூறுவதும் உண்மையாகும்.)

எப்படியாய் இருந்தாலும் தமிழ்த் தலைவர்கள், சிங்களக் குடியேற்றவாசிகள் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறுவதை எதிர்த்தார்கள். தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளார்கள்; ஆகவே இலங்கையில் ஒரு பகுதியை தமது பகுதி என்று அழைக்கும் உரிமை அவர்களுக்கு உண்டா என்ற பிரச்சினையை இது எழுப்புகின்றது. இலங்கைத் தமிழர்கள் ஏற்கனவே ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளார்களா என்ற கேள்விக்கு இல்லையென்றுதான் பதிலளிக்க முடியும். ஏனென்றால் ஒரு இனம் தேசிய இனமென்று அங்கீகரிப்பதற்கு இருக்க வேண்டிய நிபந்தனைகள் பற்றிய ஸ்டாலினின் புகழ் பெற்ற வரையறைகளிலுள்ள ஒரு நிபந்தனை இலங்கைத் தமிழர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு பொதுவானதோர் பொருளாதாரம் இல்லை. இதைப் பற்றி பின் ஆழமாய் ஆராய்வோம். ஆனால் ஒன்று மட்டும் கூறிவைக்க முடியும். இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வளர்ந்து வருகிறார்கள் என்பதைப் பற்றி ஒருவித சந்தேகமும் கிடையாது.

தமிழர் இலங்கையின் மிகச் செழிப்பற்ற, பொருளாதார ரீதியில் மோசமான சில பகுதிகளில்தான் வாழ்கின்றார்கள். இலங்கையின் வட பகுதியில் ஒரு நதியோ மலையோ கிடையாது. இதன் விளைவாக வேலை தேடி மலேயாவிற்கோ தென் இலங்கைக்கோ செல்ல வேண்டி ஏற்பட்டது. பிரித்தானியர் தமது தோட்டங்களில் வேலை செய்ய இறக்குமதி செய்த தொழிலாளர்கள் பேசும் அதே மொழியை இலங்கைத் தமிழர்கள் பேசியபடியால், அவர்களில் பலர் இத் தோட்டங்களில் மேற்பார்வையாளர்களாகவும் லிகிதர்களாகவும் வேலைபெற முடிந்தது. மிகுதியானவர்கள் பெருந்தொகையாக அரசாங்க சேவையில் சேர்ந்தார்கள். பல குடும்பங்களில் குறைந்தபட்சம் ஒருவராவது அரசாங்க ஊழியராக இருக்கிறார்.

இதுதான் தமிழர் வாழ்விலுள்ள முரண்பாடாகும். அவர்கள் இலங்கையில் ஒரு பகுதியில் வாழ்கின்றார்கள். இன்னொரு பகுதியிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

சம்பாத்தியத்தைத் தேடுகின்றார்கள். தமிழர்கள் ஒரு பிரதேசத்தில் மட்டும் இருந்தால் தமிழர்களுக்கான ஓரளவு சுய ஆட்சிக் கோரிக்கையை எதிர்த்து நிற்க முடியாது. அதை அடையக்கூடியதாகவும் இருந்திருக்கும். இதே போல, இலங்கையின் இதர பாகங்களில் நிலச் சொத்துரிமையையும் உத்தியோகப் பார்க்கும் உரிமையையும் தமிழர்கள் கைவிட முடியுமென்றால் தமிழ்ப் பிரதேசத்தில் ஏற்கனவே குடியேறியுள்ள சிங்கள குடியேற்ற வாசிகளை எதிர்ப்பது தக்கதாக இருக்கும்.

இருப்பினும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்குப் பின்னாலிருந்த அந்தரங்க நோக்கம், இறுதியில் தமிழர் பெரும்பான்மையாக விளங்கும் மாகாணத்தை சிங்களப் பெரும்பான்மை மாகாணமாக மாற்றுவதே என்பதிற் சந்தேகமில்லை. டி. எஸ். சேனநாயக்க மிகவும் புத்திசாலித்தனமான சிங்களத் தலைவர். அவர் ஒரு போதும் பகிரங்கமாக வகுப்புவாதம் பேசவில்லை. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் இலக்கை நோக்கி அவர் உறுதியாக உழைத்தார். இந்த இரகசியத்தை டி. எஸ். சேனநாயக்காவின் சகாக்களில் ஒருவரான வி. ரத்னாயக்கா, டி. எஸ். சேனநாயக்காவின் மரணத்திற்குப் பின் நிகழ்த்திய உரை ஒன்றில் அவிழ்த்து விட்டார்.

இப்படி நிலவிய நிலைமைகளில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் சாத்தியமான மிகச் சிறந்த சமரசமாகும். ஆனால் அது சரிவருமா என்று பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. யூ. என். பி. குழப்பிய குட்டையில் மீன் பிடிக்க முயன்றது. இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பை அணிதிரட்டும் முகமாக அது கண்டிக்கு யாத்திரை ஒன்றை ஒழுங்கு படுத்தியது. பண்டாரநாயக்கா இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாக, சிறந்த அரசியல் வாதி என்ற ரீதியில் தன் உச்ச கட்டத்திற்கு எழுந்தார். கண்டி போகம்பர மைதானத்தில் அவர் நிகழ்த்திய புகழ் பெற்ற - ஒரு வேளை அவருடைய மிகச் சிறந்த - சொற்பொழிவு அவரிடம் இருந்த நல்லம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக எப்பொழுதும் நினைவு கூரத்தக்கதாகும். ஆனால் அவருடைய முகாமிலிருந்த இனவெறிச் சக்திகளும் கிளர்ச்சி செய்தன. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அவருக்கு உதவி புரிவதற்குப் பதிலாக இத் தருணத்தில்தான் முட்டாள்த் தனமான ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இவ் வியக்கத்திற்கு எதிராக தெற்கில் சிங்கள வகுப்புவாதியான கே. எம். பி. ராஜரத்தின தலைமையிலான தார்பூசும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் பொது இடங்களிலுள்ள தமிழ் வார்த்தைகள் மீது தார் தாராளமாக பூசப்பட்டு அவை அழிக்கப்பட்டன. ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

இரு தரப்பிலும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இது முடிவில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட மிகவும் மோசமான வகுப்புவாத-



படிப்பகம்

www.padippakam.com

இரத்தம் சிந்திய கலவரத்திற்கு வழி கோலியது. இது நேர்மையான சிந்தையுடைய இலங்கையர் எவரையும் வெட்கத்தில் தலையைத் தொங்க விடச் செய்யும் சம்பவமாகும். எமது நாட்டின் வரலாற்றில் அது ஒரு நிரந்தரக் கறையாக விளங்கும். ஒரு நாளில் மனிதர் மிருகங்களாக மாறினர். வேற்று மொழி பேசும் குற்றமல்லாது வேறு எந்தச் சச்சரவும் இல்லாத மனிதர் மீது பெற்றோலை ஊற்றி அவர்களைக் கொளுத்தும் அளவிற்கு அவர்கள் அதல பாதாளத்தில் வீழ்ந்தார்கள்.

ஆனால் இந்த அநியாயங்களைச் செய்தவர்கள் சிங்களவர் மத்தியிலுள்ள வகுப்பு வாதிகள் மாத்திரமல்ல, தமிழர்கள் மத்தியில் உள்ள வகுப்பு வாதிகளும்தான் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். அன்று தேசாதிபதியாக இருந்த சேர். ஒலிவர் குணதிலக்க பதவியை இராஜினாமா செய்தபின் பத்திரிகைகளுக்கு கொடுத்த செய்தியின் பிரகாரம், நயினாதீவுக் கோவிலிலிருந்த புத்தருடைய பொற்சிலை களவாடப்பட்டதாகவும், இது வெளியே தெரியவந்தால் வகுப்புவாதக் கலவரம் இன்னும் மோசமடையும் என்ற பயத்தினால், ஒலிவர் குணதிலக்கா பர்மாவின் ஸ்தானிகரை அணுகி அத் தேசத்திலிருந்து அதே போன்ற ஒரு பொற்சிலையை வரவழைத்து, நடந்த விஷயத்தை மூடி மறைத்தாரென்று கூறியிருக்கின்றார்.

இந்தப் பயங்கரமான சம்பவம் ஏற்பட்டதற்கான உடனடிக் காரணத்தை ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்த தமிழரசுக் கட்சியின் அதிதீவிரவாதத் தலைவர்களும், தார் பூசும் இயக்கத்தை அவிழ்த்துவிட்ட சிங்களவர்கள் மத்தியிலான வெறிபிடித்த வகுப்பு வாதிகளும், இயக்கம் பரவியபோது தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் செய்யத் தயங்கிய பண்டாரநாயக்க அரசாங்கமும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவசர கால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட போதுதான் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. தெற்கில் ஒதுங்க இடமின்றி இருந்த தமிழர்களை கப்பல் மூலம் எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது. இது சமீப காலத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான வகுப்பு வாத உறவுகள் மிகவும் மோசமான நிலைமையை அடைந்ததைப் பிரதிபலித்தது.

இக் கலகங்கள் தமிழரசுக் கட்சியின் அரசியல் பங்கரோட்டுத் தனத்தையும் பிரதிபலித்தது. அதன் தலைவர்கள் அவசரகால நிலைமையின் ஆரம்ப நாட்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இக் கட்சி, தான் பிரதிநிதித்துவம் செய்ததாகக் கூறும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கச் சக்தியற்றிருந்தது. ஆனால் அது தன் மலட்டுப் போக்கிலேயே செயற்பட்டது. தொடர்ந்தும் வடக்கில் வகுப்பு வாதம் பேசியது. பண்டாரநாயக்கா, இருதடவை பதவி வகித்த



படிப்பகம்

www.padippakam.com

காலங்களிலும் முன்வைத்த நெற்காணி மசோதா, பாடசாலைகளைச் சுவீகரித்தல் போன்ற ஒவ்வொரு முற்போக்கு நடவடிக்கைகளையும் எதிர்த்ததன் மூலம் முற்போக்குச் சிங்கள மக்களின் அபிப்பிராயத்தைக் கூட பகைமைப் படுத்தியது. சிங்களவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கும் இரண்டு கட்சிகளும் தேர்தலில் சரி சமமாகப் பிரிவார்கள், அத்தருணத்தில் தாம் மத்தியஸ்தர்களாகப் புகுந்து தமிழர்களின் உரிமைகளுக்காக சந்தர்ப்பவாத பேரம் பேச முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்தனர். இது தமிழர்களின் உரிமையை இரண்டிலொரு சிங்களக் கட்சியின் மேசையில் விற்பனை செய்யும் முயற்சியே தவிர வேறொன்று மல்ல. இத்தகைய சந்தர்ப்பம் 1965-ல் தமிழரசுக் கட்சிக்கு வரத்தான் செய்தது. அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

தனிச் சிங்கள மசோதா நிறைவேற்றப் பட்டதனால் எம். ஈ. பி. அரசாங்கத்திற்கிருந்த தமிழரின் ஆதரவு கெடுக்கப்பட்டுவிட்டதென் பதை உணர்ந்த படியால் போலும் பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் நியாயமான உபயோகத்திற்கான மசோதா ஒன்றை நிறைவேற்றினர். 1956 தேர்தலில் பெரும்பாலும் சிங்களப் பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் யூ. என். பி.யை எதிர்த்து எம். ஈ. பி. யையே ஆதரித்தனர். இந்த மசோதாவின் கீழ் அண்மையில்தான் விதிகள் வகுக்கப் பட்டுள்ளன. ஆனால் அவைகள் தமிழ்த் தலைவர்களைத் திருப்தியடையச் செய்யவில்லை.

இக்காலத்தில் சிங்களம், தமிழ் இரண்டுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையில் ஊன்றி நின்ற பெரும்பான்மை சிங்கள அங்கத்துவத்தைக் கொண்ட தேசியக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். ஆனல் இது நீண்டகாலம் நிலைக்கவில்லை. பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், வகுப்புவாதம் ஆகியவற்றின் இரட்டை அழுக்கத்தின் கீழ் அவை இப்பிரச்சினையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிந்தனையை ஏற்றுக்கொண்டன.

சிங்களம் மட்டும்தான் அரசமொழியாக வேண்டும் என்ற பிரேரணையின் சாதக பாதகங்களை இன்று வாதிடுவது பயனற்றது. ஆனல் ஒரு முற்போக்கு வாதி இந்தப் பிரேரணையை ஒரேஒரு கண்ணேட்டத்தினல்தான் சரியா, நியாயமானதா என்று பார்க்க வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை அது ஐக்கியப் படுத்துகின்றதா? பிளவு படுத்துகின்றதா? இந்த அளவுகோலைக் கொண்டு பார்க்கும்போது சிங்களத்தை மட்டும் அரசமொழியாக்கும் பிரேரணை பிற்போக்கானது என்றுதான் தீர்மானிக்க வேண்டும். அது நிச்சயமாக இரண்டாம்தர முரண்பாடொன்றை (சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலுள்ள முரண்பாடு) விசாலித்து பிரதான முரண்பாட்டை (ஏகாதிபத்தியத்



படிப்பகம்

www.padippakam.com

திற்கும் சிங்கள-தமிழ் மக்களுக்குமிடையிலுள்ள முரண்பாடு) பின் தள்ளிவிட்டது. அது நண்பனை விரோதியாக்கி எதிரிக்கு சந்தோஷம் அளித்தது. 1958 இனக் கலவரங்களுக்கும் அது ஒரு பிரதான காரண மாக இருந்தது.

மொழிப் பிரச்சினையில் தாம் பெற்ற தோல்வி காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் தமக்கான ஆதரவு குறுகி வருவதையும் வகுப்புவாதக் கலவரத்தின்போது தனது கையாலாகாதத் தனத்தையும் கண்ட தமி ழரசுக் கட்சியின் தலைவர்கள், மக்களின் மதிப்பை மீண்டும் பெற்று அவர்களின் ஆதரவை பேணுவதற்கும் ஏதேனும் உணர்ச்சியைத் தூண் டும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி இருந்தது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு சத்தியாக்கிரக இயக்கத்தை ஒழுங்குபடுத்த தீர்மானித்தார்கள்.

இவ் வியக்கத்தின் மூலமாக இவர்கள் முன்வைத்த சமஷ்டிக் கோஷத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். சமஷ்டி என்பது இரண்டோ அல்லது அதற்குக் கூடின இனங்களினுல் ஒருமித்து இயக்குவிக்கும் ஒரு ஒழுங்குமுறை. இதை சம்பந்தப்பட்ட இனங்களின் நல்லெண்ணத்துட னும் ஒற்றுமையுடனும் மாத்திரமே செயற்படுத்தலாம். பலாத்காரத் தினுல் முடியாது. இலங்கையில் இன்று நிலவும் நிலையில் சிங்களவர் கள் ஒரு போதிலும் சமஷ்டிக்கு ஒத்துக் கொள்ள மாட்டார்களென் பது யாரும் அறிந்த உண்மை. மேலாக, தமிழரசுக் கட்சித் தலைவர் கள் கட்டவிழ்த்து விட்ட சிங்களவருக் கெதிரான வகுப்புவாதப் பிரச் சாரத்தின் காரணமாக சமஷ்டிக் கொள்கையையும் நாட்டை இரண் டாகப் பிரிப்பதையும் ஒன்ருகவே கருதுகிருர்கள். இவ்விஷயத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கையாண்ட உபாய தந்திரங்கள் படு மோசமானதும் படு பிற்போக்குத் தனமானதுமாகும்.

இது ஒருபுறமிருக்க, முதலாளித்துவ அமைப்பின் கீழ் சமஷ்டி முறையின் மூலமாக தேசிய இனப் பிரச்சினை உலகத்தில் ஏதாவது ஒரு நாட்டில் தீர்க்கப்பட்டிருக்கின்றதா என்ற கேள்விக்கு மறுமொழி யளிக்க முடியாமல் தத்தளிக்கின்றனர் தமிழரசுக் கட்சித் தலைவர்கள். அண்மை நாடாகிய இந்தியாவை எடுத்துக் கொள்வோம். அதில் ஒரு சமஷ்டி அரசாங்கம் நிலவுகின்றது. ஆனுல் தேசிய இனப்பிரச்சினைகள் தீர்ந்து விட்டதா? இந்தியை அரச கரும மொழியாக்குவதற்கு எதி ராக இயக்கங்கள் நடத்தப்படவில்லையா? தேசிய இனங்களுக்கு வேவ் வேறு அரசு கொடுக்கப்படவேண்டுமென்று இயக்கங்கள் இல்லையா?

அல்லாவிடில் அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். அந் நாட் டிலும் ஒரு சமஷ்டி அரசாங்கம் நிலவுகிறது. ஆனுல் கறுப்பு நீக்ரோ



படிப்பகம்

www.padippakam.com

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிந்ததா? கனடா ஒரு சமஷ்டி அரசாங்கமாக இருந்தும், ஆங்கிலம் பேசும் கனேடியர்களுக்கும் பிரெஞ்சு மொழி பேசும் கனேடியருக்கும் மத்தியிலும் முரண்பாடுகள் இல்லையா? பெல்ஜியத்தில் சில வருடங்களுக்கு முன்பு மொழி அடிப்படையில் கலவரங்கள் ஏற்படவில்லையா?

ஆனபடியால் முதலாளித்துவத்தின் கீழ் சமஷ்டி அமைப்பு மூலமாக தேசிய இனப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கலாம் என்பது தவறு. சோஷலிசத்தின் கீழ் மாத்திரமே தேசிய இனப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு சமஷ்டி ஒரு வழியாகும்.

ஆனால் தமிழரசுக் கட்சி 1962ம் வருடத்தில் ஒழுங்கு செய்த சத்தியாக்கிரக இயக்கத்திற்கு பெரும் ஆதரவு கிடைத்தது. தொடர்ந்து திரள் திரளான சத்தியாக்கிரகிகள் கச்சேரி வாசலை முற்றுகையிட்டார்கள். இந்த இயக்கத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டது தமிழரசுக் கட்சித் தலைவர்களை தலை கனக்கச் செய்தது. அவர்கள் கலக வாடை வீசும் நடவடிக்கைகளிலும் தனியரசொன்றை ஸ்தாபிப்பது போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள். தமது முத்திரைகளை அச்சிட்டு விநியோகிக்கத் தொடங்கினார்கள்.

அரசாங்கம் செயற்படத் தீர்மானித்தது. சத்தியாக்கிரகிகளை வெளியேற்றும்படி அதன் துருப்புக்களுக்கு உத்தரவிட்டது. இதை சுலபமாக சத்தியாக்கிரகிகளின் எதிர்ப்பின்றி அவர்கள் செய்ய முடிந்தது. இத்தகைய நிலைமைக்கு முகங்கொடுக்க தமிழரசுக் கட்சி திட்டங்கள் வகுக்கவில்லை. அவர்களுடைய இயக்கம் சரிந்து வீழ்ந்தது. மீண்டும், தமிழர்கள் தம் மத்தியில் மிகப் பெரும் ஐக்கியம் இருந்த போதும் சற்றுத், தானும் வட அயர்லாந்தில் நடந்த கலகத்தைப் போன்ற ஒன்றைக் கூட செய்ய முடியாமற் போனதற்கு காரணம், பல தமிழர்களின் பொருளாதார நலன்கள் தென் இலங்கையில் இருப்பதனாலாகும்.

1965-ல் நடந்த தேர்தல், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் காத்திருந்த ஓர் நிலைமையை கொண்டுவந்து விட்டது. இத் தேர்தலில் யாருக்கும் ஒரு தீர்க்கமான வெற்றியைப் பெற முடியவில்லை. ஆனால் தனியொரு கட்சியாக யூ. என். பி. கூடுதலான ஆசனங்களைப் பெற்றது. யூ. என். பி. கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தமிழரசுக் கட்சியின் ஆதரவைத் தேடி நின்றன. யூ. என். பி. கட்சியுடன் தமிழரசுக் கட்சி கூட்டு சேர்ந்தபின், தமிழரசுக் கட்சியை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கடுமையாகக் கண்டித்த போதும், இக் கட்சி தமிழரசுக் கட்சியுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வர பெரிதும் முயற்சி எடுத்ததென்பதிலும், இந்த விஷயத்தில் தன்னால் இயன்ற அளவு விட்டுக் கொடுக்கத் தயாராய் இருந்தது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

டட்லி சேனநாயக்காவிற்கும் செல்வநாயகத்திற்கும் இடையில் ஏற்பட்ட இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திருச்செல்வம் மந்திரி சபையில் இடம் பெற்றார்.

1966 ஜனவரி 8-ம் திகதி டட்லி சேனநாயக்கா தமிழ் மொழியின் நியாயமான உரிமை மசோதாவின் கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகளை அங்கீகரிக்க முயற்சித்தபோது எதிர்க் கட்சிகள் வகுப்புவாத வேலை நிறுத்தம் ஒன்றையும் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் ஒழுங்கு படுத்தினார்கள். இதில் ஒரு புத்த மதகுரு சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். இச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும். ஸ்ரீ லங்கா — சம சமாஜ - திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் சேர்ந்து நடத்திய 1966 ஜனவரி 8-ம் திகதிய வகுப்புவாத வேலை நிறுத்தத்தை எமது கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையிலான இலங்கை தொழிற் சங்க சம்மேளனமும் வன்மையாகக் கண்டித்து அதில் கலந்து கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் சந்தர்ப்பவாதம் பலன் தரவில்லை. தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டபடி டட்லி சேனநாயக்கா, மாவட்டங்களுக்கு ஓரளவு சுயாட்சி வழங்குவதற்காக மாவட்டசபை மசோதா ஒன்றை முன்வைத்தார். கூட்டுக் கட்சிகள் நாட்டிலும் யூ. என். பி. அணிகள் மத்தியிலும் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியபடியினால் டட்லி அந்த மசோதாவை கைவிட வேண்டி ஏற்பட்டது. விரைவில் மந்திரிசபையில் இருந்த தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி தாம் ராஜினமா செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டார். தேசிய அரசாங்கம் என்ற மாயை மறைந்தது.

இரண்டு முறை சிங்கள முதலாளித்துவ தலைவர்களான பண்டாரநாயக்காவுடனும் டட்லி சேனநாயக்காவுடனும் செய்த ஒப்பந்தங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாததினால் விரக்தியடைந்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிங்களவர்களுடன் இனிமேல் ஒத்துவாழ முடியாதென்ற தவறான தீர்ப்புக்கு வந்தனர். இத்தர்க்கத்தில் இருக்கும் பிழை என்னவெனில், இவர்கள் இவ்வளவு காலமுமாக தங்களுக்கு நேச சக்திகளை தேடியது. சிங்கள முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களிடையேதான். இவர்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் புரட்சிகர சக்திகளான தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் மத்தியில் நேச சக்திகளை தேட முயலவில்லை. எல்லாச் சிங்களவர்களையும், வர்க்க பேதமின்றி, ஒரே கண்ணோட்டத்துடன் பார்த்தனர். இப் பிழையை இப்போதும் செய்கின்றனர். தமிழரசுக் கட்சி அல்லது இன்றைய கூட்டணி தமிழர்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ நிலப்



படிப்பகம்

www.padippakam.com

பிரபுத்துவ சக்தியின் பிரதிநிதிகள் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. எவ்விதத்தில் பொன்னம்பலத்தையும் செல்வநாயகத்தையும் பார்த்து தமிழர்கள் எல்லோரையும் கணிப்பிட முடியாதோ, அதேபோல பண்டாரநாயக்காவையோ சேனநாயக்காவையோ அல்லது என். எம். பெரேராவையோ அல்லது பீட்டர் கெனமனையோ பார்த்து சிங்கள மக்களைக் கணிப்பிட முடியாது. இரு மக்களிடையிலும் இப் பிற்போக்குத் தலைவர்களுக்கு எதிராக புரட்சிகர சக்திகளுண்டு. இச்சக்திகளின் ஒற்றுமையில் தான் வருங்கால இலங்கையின் முன்னேற்றம் தங்கியிருக்கின்றது.

1970-ம் வருடம் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணிக் கட்சிகள் பாராளுமன்றத்தில், மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற்றதன் காரணமாக சந்தர்ப்ப வாத அரசியல் விளையாட்டுக்கு இடமில்லாமல் போய்விட்டது. இதனால் விரக்தியடைந்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமிழ்க் காங்கிரசுடன் கூட்டு முன்னணி ஒன்று அமைத்துக் கொண்டு, மற்ற எல்லைக்குத் தாண்டி, தமது பழைய சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு, தனித் தமிழ்நாடு வேண்டுமென்ற பிரிவினைக் கோஷத்தை முன்வைத்துள்ளது.

இது, ஒரு அளவிற்கு, வெளிநாட்டு நாணயமின்மையால் உப உணவுப் பொருட்களின் தடைசெய்யப்பட்ட நிலைமையை பாவித்து, அப்பொருட்களை வட இலங்கையில் பயிர் செய்வதன் மூலமாக லாபத்தை சேகரித்திருக்கும் ஒரு பணக்கார வர்க்கம் வளர்ந்திருப்பதை பிரதிபலிக்கின்றது. அதே போல் சிறிய கைத்தொழில்கள் மூலம் (சவர்க்காரத் தொழிற்சாலைகள், கண்ணாடித் தொழிற்சாலைகள், அலுமீனியத் தொழிற்சாலைகள்) ஒரு முதலாளித்துவ வர்க்கம் வளர ஆரம்பித்துள்ளது. இவர்களுக்கு முழு இலங்கையிலுமே சிங்கள முதலாளி வர்க்கத்துடன் போட்டி போட முடியாததினால், தாங்கள் தனியாகவே சுரண்டுவதற்கு தனி நாடு கோரி நிற்கின்றனர். அதே நேரத்தில் இலங்கையை இந்தியாவோடு என்றுவது இணைக்கவேண்டும் என்ற இந்திய விஸ்தரிப்புவாதிகளின் தாக்கமும் இக் கோஷத்திற்குப் பின்னால் இருக்கின்றது. தென்னிந்தியாவிலிருந்து அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்திற்கு வருவதும், இலங்கையிலிருந்து தப்பியோடுபவர்களுக்கு தமிழ் நாட்டில் அபயம் அளிப்பதும், தமிழ் நாட்டுத் தலைவர்கள் கள்ளமாக யாழ்ப்பாணம் வந்து இரகசியமாகக் கூட்டங்களில் பங்குபற்றித் திரும்புவதும், தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு தமிழ் நாட்டில் அளிக்கப்படும் வரவேற்பும் இந்த உண்மையை நிரூபிக்கின்றது.

இதை இன்னும் ஆழமாகக் கூர்ந்து கவனிப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

# நாலாவது அத்தியாயம்

# எதிரி யார்? நண்பர் யார்?

எந்தவொரு போராட்டத்திற்கும் எதிரி யார், நண்பர் யார் என்பதைச் சரியாகக் கணித்து வைத்திருக்க வேண்டும். சரியான எதிரிக்கெதிராக, உண்மையான நண்பர்களுடன் சேர்ந்து போராட வேண்டும். இந்தப் புத்திமதியை தோழர் மா சே துங் சீன மக்களுக்கு 1926லேயே கூறி வைத்துள்ளார். இப் பிரச்சினை எங்களுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இப் பிரச்சினையில் தெளிவான அபிப்பிராயம் இல்லாததால்தான் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருக்கும் முற்போக்குச் சக்திகளிடையில் குழப்பமான நிலை நிலவுகின்றது.

வெள்ளைக்கார ஏகாதிபத்திய வாதிகள் சிங்களவர்களையும் தமிழர்களையும் சேர்த்து அடக்கியாண்ட காலத்திலே, வெள்ளையனே வெளியேறு! என்று குரல் எழுப்ப மறுத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களில் பங்கு பற்ருத, தமிழர் கூட்டணித் தலைவர்கள் இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பிதற்றத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் ஒரு அரசு (State) இருப்பதென்பதும், அதின் கீழ் இரு முக்கியமான இனங்கள் (Races) வளர்ந்து வருகின்றன என்பதும் உண்மையே. அத்துடன் பெரும்பான்மை சிங்களவரின் பெரு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ தலைவர்கள் தமிழ் மக்களுக்கெதிராகப் பல வழிகளில் பாகுபாடு காட்டி வருகின்றுர்கள் என்பதும் உண்மையே. முக்கியமாக மொழி, கல்வி, கலாசாரத் துறைகளிலும் உத்தியோக வாய்ப்புகளிலும், குடியேற்றத் திட்டத்தின் மூலமும் தமிழர்களுக்கெதிராக பாகுபாடு காட்டி வரப்படுகின்றது.

ஆனால் இது ஏகாதிபத்திய சுரண்டல் அல்ல. ஒருநாளும் நாங்கள் மறக்கக் கூடாத உண்மை என்னவெனில், இன்று தமிழர்களையும் சிங்களவர்களையும் நசுக்கும் சக்திகள் ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுத்துவமும், சிங்கள - தமிழ் பெரிய முதலாளி வர்க்கமுமே. இவர்கள்தான் சிங்கள-தமிழ் மக்களின் பொது எதிரிகள். இவர்களுக்கு எதிராகவே ஒற்றுமைப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ், ஒற்றுமைப்படுத்தி ஐக்கிய முன்னணி அமைக்கவேண்



படிப்பகம்

www.padippakam.com

டும். தமிழர்களின் நியாயமான உரிமைகளைக் கொடுக்கவேண்டுமென்பது இந்த ஐக்கிய முன்னணியின் ஒரு முக்கிய கோரிக்கையாக இருக்க வேண்டும். வேறு விதத்தில் கூறுவதாயிருந்தால் தமிழினத்தின் நியாயமான கோரிக்கைகளை, சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் புரட்சிகர சக்திகளுடன் ஏற்படுத்தும் ஒற்றுமையின் மூலமாகவே வெல்ல முடியும்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொது எதிரி இருப்பதினுல்தான், இரு மக்களுக்குமே பொதுப் பிரச்சினைகள் இருக்கின்றன என்று கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதுமே சுட்டிக் காட்டி வந்திருக்கிறது. தமிழ் நாடு கோரும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் இப்பிரச்சினைகளைப் புறக்கணிக்கின்றனர். பொதுப் பிரச்சினைகளுக்கு குரலெழுப்ப மறுக்கின்றனர்.

ஆனுல் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை என்ன? வேலையில்லாத் திண்டாட்டமும் பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்பும் இன்று அவர்களை வாழ்க்கை நடத்த முடியாத நிலைமைக்குத் தள்ளியுள்ளது. இது சிங்களவர்களுக்கும் பொதுவான பிரச்சினையே. பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை சிங்களப் பசி தமிழ்ப் பசியென்று வித்தியாசமான தொன்றும் இல்லை. விலைவாசி அதிகரிப்பதை எதிர்த்தும், வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கும்படி கோரியும், விசாரணை இன்றி காவலில் வைத்திருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யும்படி வேண்டியும் தமிழ்க் கூட்டணித் தலைவர்கள் இயக்கம் நடத்தி இருக்கின்ருர்களா? ஏன் நடத்தவில்லை? ஏகாதிபத்தியத்திற்கும், நிலப் பிரபுத்துவத்திற்கும் பெரிய முதலாளித்துவத்திற்கும் எதிராக இயக்கம் நடத்தத் தயாருமில்லை, துணிச்சலுமில்லை. இதே காரணத்திற்காகத்தான் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைப் பிளவு செய்யும் பிரிவினைக் கோஷத்தையும் முன் வைத்துள்ளனர். இனம் இனத்தை ஆளுவதன் மூலமாக பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற பொய்க் கதையை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர். இது உண்மையானுல் சிங்களவர் மத்தியில் இன்று பிரச்சினை இருக்கத் தேவையில்லை. இக் கூற்றின் மூலமாக - ஒவ்வொரு இனத்திற்குள் இருக்கும் வர்க்க முரண்பாட்டையும் அதன் மூலமாக வெடிக்கும் வர்க்கப் போராட்டத்தையும் மூடி மறைக்கப் பார்க்கின்றனர்.

ஆண்ட தமிழன் திரும்பவும் ஆளவேண்டும் என்ற கோஷத்தையும் அர்த்தமற்ற விதத்தில் தமிழர் கூட்டணித் தலைவர் முன்வைக்கின்றனர். ஆனுல் அவர்கள் வெளிப்படையாகக் கூறத் தவறுவது என்னவென்ருல், அன்றைக்கு ஆண்ட தமிழன் நிலப்பிரபுத்துவ பரம்பரையில், உடையார், மணியகாரன், முதலியார் பரம்பரையில் வந்த-தனக்குக் கீழ் அடிமைகளாக இருந்த தமிழர்களைக் கட்டிவைத்து, சவுக்கால்



படிப்பகம்

www.padippakam.com

அடித்து வந்த தமிழன் என்பதே. இன்றைக்குப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதியாக இருப்போர்களில் பெரும்பாலானோர் இந்தப் பரம்பரையில் இருந்து வந்தவர்களே. அந்த நிலைக்குத் திரும்பவும் போகச் சாதாரண தமிழ் மக்கள் தயாராக இல்லை.

நான் பல தடவைகளில் யாழ்ப்பாணத்தில் தொழிற் கோட்டின் முன் தமிழ் தொழிலாளர்களின் சார்பாக வாதாடி இருக்கின்றேன். ஒரு உதாரணத்தைத் தருகின்றேன். யாழ்ப்பாண நகரிலிருக்கும் ஒரு தியேட்டர் முதலாளி ஏழு தொழிலாளரை வேலை நீக்கம் செய்தார். முதலாளியும் சுத்தத் தமிழன். தொழிலாளர்களும் சுத்தத் தமிழர்களே. ஆனால் தொழிலாளர்களின் சார்பாக வாதாடியது கம்யூனிஸ்ட்டாகிய நான். தமிழ் முதலாளியின் சார்பாக வாதாடியவர் தமிழர் கூட்டணியின் தலைவர்களுள் ஒருவரான திருவாளர் ஆலாலசுந்தரம் ஆவர். அந்த தியேட்டர் முதலாளி இன்றைய தமிழர் கூட்டணியின் முக்கிய பிரமுகராவர். இது எதை எடுத்துக் காட்டுகின்றது? சிங்களவர் மத்தியில் போலவேதான், தமிழர்கள் மத்தியிலும் வர்க்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன — முதலாளியும் தொழிலாளியும், நிலப்பிரபுவும் விவசாயியும், சுரண்டுபவனும் சுரண்டப்படுபவனும், இவ்விரு இனங்களுக்கு மத்தியில் நீடித்த பொது நலன்கள் இருக்க முடியாது. முரண்பாடே இருக்கும். ஆனபடியினால் தனித் தமிழ்நாடு கோரிக்கையின் மூலம் தமிழ் முதலாளி, தமிழ் தொழிலாளியைச் சுரண்டும் உரிமையையே கேட்கின்றான்.

இவ் விடத்தில் இன்னொரு பிரச்சினையையும் கவனிப்போம். சிங்கள இனத்துடன் சமத்துவம் கோரும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் தம் மத்தியிலிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களென்று கூறப்படுகின்ற, தங்கள் மொழியையே பேசுகின்ற 5 லட்சம் தமிழர்களுக்கு சம உரிமை கொடுக்க மறுக்கின்றனர். இம் மக்களின் சார்பாக சாதிக் கொடுமையை எதிர்த்தும் தீண்டாமையை எதிர்த்தும் போராட்டம் நடத்தியவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாங்களே.

மாவிட்டபுரக் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்க நடத்திய சரித்திரப் பிரசித்தி பெற்ற போராட்டக் காலத்தில், அத் தொகுதியின் அங்கத்தவரான தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், அத்தொகுதியில் தேர்தலுக்கு நின்ற திரிபுவாதி வி. பொன்னம்பலமும் அந்தப் பக்கத்தில் தலை காட்டாதது கவனத்திற்கு எடுக்க வேண்டிய விஷயம். இதற்குக் காரணம் உயர் சாதியினர் என்பவரின் வாக்குகளை இழக்க நேரிடும் என்ற பயமே.

தம்மத்தியிலிருக்கும், தம்மொழிபேசும் சிறுபான்மைத் தமிழருக்குச் சம உரிமை கொடுக்க மறுக்கும் தமிழ் இனத்துக்குப் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பான்மை இனமாகிய சிங்கள மக்களுடன் சம உரிமைகோர எவ்வித உரிமையும் கிடையாது.

இது ஒருபுறமிருக்க பிரிவினைக் கோஷம் எப்பொழுதுமே ஒரு பிற்போக்குக் கோஷமென்பதை நாங்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். இரண்டு உதாரணங்கள் மூலமாக இதை விளக்குவோம். இந்தியாவிலிருந்து வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகள் அரசியல் ரீதியில் வெளியேறியபோது இந்தியக் கண்டத்தை இரண்டு துண்டாகக் கூறுபோட்டுத்தான் சென்றனர். இதற்குக் காரணம் இந்தியாவின் பலத்தைக் குறையச் செய்வதே. இந்தியா, இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்படாமல், ஒரு நாடாக இருந்திருந்தால், அது, இன்று சீனாவைப் போல், ஒரு பெரிய சக்திமிக்க அரசாக மாறியிருக்கும். அது மட்டுமல்ல, இந்திய கண்டத்திலிருந்த புரட்சிகர சக்திகள் பிளவுசெய்யப்படாமலிருந்திருந்தால், இன்று சீனாவைப்போல் இந்தியாவும் ஒரு சோஷலிஸ்டு நாடாக மாற வாய்ப்பு இருந்திருக்கும். இன்று சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் இந்திய விஸ்தரிப்பு வாதிகள் பாகிஸ்தானை இரண்டு துண்டாகக் கூறுபோட்டிருக்கின்றனர். இதன் மூலமாக பாகிஸ்தானின் இரு பாகங்களும் பலம் குன்றியவையாயின.

வங்காள தேசத்தை உருவாக்கிய காலத்தில் ஒரு மொழி பேசும் மக்களை ஒன்று சேர்க்க வேண்டுமென்று வாதாடினர். அப்படியானால் அதே மொழி பேசும் மேற்கு வங்காளத்திலிருக்கும் மக்களை ஏன் வங்காள தேசத்துடன் இணைக்கக்கூடாது? வங்காள தேசத்தினை உருவாக்க நடத்திய போர் ஒரு தேசிய இனத்தின் உரிமையையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க நடத்திய போரென்று அன்று மார்பு தட்டினர். இன்று வங்காள தேசத்தில் ஜனநாயகத்துக்கு என்னவாயிற்று? அரசியல் கட்சிகள் எல்லாவற்றிற்கும் தடை போடப்படவில்லையா? பத்திரிகைச் சுதந்திரத்துக்கு முற்றுப்புள்ளி போடவில்லையா? வங்காள தேசத்தின் பொருளாதாரம் இந்திய விஸ்தரிப்பு வாதிகளுக்கு அடகு வைக்கப்படவில்லையா?

இந்த சம்பவங்களிலிருந்து நாங்கள் சரியான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இலங்கை ஒரு சிறிய தீவு. அதனைக் கூறு போடுவதன் மூலமாக அதன் பலம் இன்னும் குன்றும். முக்கியமாக தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர சக்திகளும் பிளவடையும். அது மாத்திரமல்ல, இன்று ஒரு பொருளாதாரத்தின் கீழ்த்தான் சிங்களவர்களும் தமிழர்களும் வசிக்கின்றனர். இதை இரண்டாகத் துண்டித்து, சிங்களவர்களுக்கு ஒரு பொருளாதாரம் தமிழர்களுக்கு ஒரு பொருளாதாரம்



படிப்பகம்

www.padippakam.com

என்று உருவாக்கக்கூடிய நிலைமையோ சக்தியோ இலங்கைக்கு இன்று இல்லை. அப்படிச் செய்யப் போனால் இருக்கும் நிலைமை இரு இனங்களுக்கும் இன்னும் மோசமாகும். ஆனபடியினால்தான் நாங்கள் பிரிவினையை எதிர்க்கின்றோம்.

அதிற்குப்பதிலாக, சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் இருக்கும் புரட்சிகர சக்திகளை-முக்கியமாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், வாலிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் தேசப் பற்றுள்ளவர்களை - தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒற்றுமைப் படுத்தி, இரு இனங்களுக்கும் பொது எதிரியான ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், பெரிய முதலாளி வர்க்கத்தையும் போராட்டத்தில் தோற்கடிக்கச் செய்து, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒரு புரட்சிகர அரசாங்கத்தை உருவாக்குவதன் மூலமாக மாத்திரமே, சிங்கள-தமிழ் மக்களின் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அது மாத்திரமல்ல, தமிழ் மக்களின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணுவதற்கு உரிய சூழ்நிலைக்கான ஒரு வழிகோல முடியும்.

இவ்வகையான ஒரு சூழ்நிலையின்கீழ், தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு வழியாக பிரதேச சுய ஆட்சிமுறையைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக்கின்றது. இம் முறையின் கீழ், ஒற்றை ஆட்சியினுள், தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில், தங்களைத் தாங்களே தம்மொழியில் ஆளுவதற்கும், கல்வி கற்பதற்கும், கலாசாரத்தைப் பேணி வளர்ப்பதற்கும், வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் கைத்தொழிலையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்வதற்கும், தாங்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களைக் குடியேற்றத் திட்டத்தின் மூலமாகச் சிங்கள மாகாணங்களாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தடைசெய்யவும் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும். இது மாத்திரமல்ல, புதிய ஜனநாயகப் புரட்சிக்குப்பின், தொழிலாள வர்க்கத் தலைமையிலுருவாகும் அரசாங்கத்தின் கீழ், இன்றைய பொருளாதாரப் போட்டி நிலைமை மாறியபின் சிங்களத்துடன் தமிழும் ஒரு அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதில் எவ்வித பிரச்சினையும் இருக்கமாட்டாது.



படிப்பகம்

www.padippakam.com

# ஐந்தாவது அத்தியாயம்

## சாத்வீகமா பலாத்காரமா?

எங்களுடைய இலட்சியத்தைப் பற்றி, அதாவது நாங்கள் அடையவேண்டிய இலக்கைப் பற்றி, எங்கள் மத்தியில் சரியானதெளிவு ஏற்பட்டபின், அவ்விலட்சியத்தை அடைவதற்கு எது திறமையான வழி என்பதைத் தீர்மானம் செய்வதே அதற்கடுத்த முக்கிய வேலையாகும்.

பல காலங்களாகத் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த தலைவர்கள் பாராளுமன்றப் பாதை மூலமாக, சமாதான வழியில் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாமென்று, மக்களின் வாக்குகளைத் திரட்டி, அவர்களை ஏமாற்றி வந்திருக்கின்றனர். ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழரின் முடிசூடா மன்னனாக இருந்த காலத்திலோ, அதற்குப் பின்னர் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகளைப் பெற்ற காலத்திலோ இவ்விரு கட்சிகளுக்கும் சமாதானவழியில், பாராளுமன்றத்தின் மூலமாகத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாமற் போய்விட்டது. இதனால், இவர்களுடைய அரசியல் பங்களோட்டுத்தனம் மக்கள் மத்தியில் அம்பலமானபடியினால்தான், 1962-ம் வருடத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தனர். ஆனால் இந்தச் சப்பாணிப் போராட்டத்தை வெகு விரைவில் பலாத்காரத்தை பாவித்து அரசாங்கத்தால் முறியடிக்க முடிந்தது. அஹிம்சா தர்மத்தைப் போதித்த தலைவர்களுக்கு, பலாத்காரத்தை எதிர்ப்பதற்கு எதிர்ப்பலாத்காரத்தை பாவிக்கவேண்டுமென்ற தர்க்கத்தை முன்வைக்க முடியாமற் போயிற்று.

1974-ல் திரு. செல்வநாயகம் தனது பாராளுமன்ற ஆசனத்தை ராஜினமாச் செய்து திரும்பவும் அத்தொகுதியில் தேர்தலுக்குநின்றதற்கு உண்மையான காரணம் என்னவெனில் தமிழ் மக்கள் மத்தியில், அதுவும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் வளர்ந்துகொண்டுவந்த போராட்ட மனப்பான்மையை சமாதான, பாராளுமன்றப் பாதைக்குத் திசை திருப்பவேண்டிய நிர்ப்பந்தமேயாகும்.

ஏகாதிபத்தியவாதிகளும், முதலாளிவர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் பாராளுமன்ற ஜனநாயகத்தை உருவாக்கியதற்குக் காரணம், ஒரு நாட்



படிப்பகம்

www.padippakam.com

டில் உண்மையான அதிகாரம் ஆயுதம் தாங்கிய படைகளின் கையில் தான் இருக்கிறதென்ற உண்மையை மூடிமறைத்து, மக்களின் கவனத்தை வேறுபக்கத்துக்குத் திசை திருப்பி, சமாதான பாராளுமன்ற வழி என்னும் கோஷத்தின் மூலமாக உழைக்கும் வர்க்கத்தின் வர்க்க உணர்வையும் போராட்ட மனப்பான்மையையும் மழுங்கச்செய்வதற்கேயாகும். இதனை வேறுவகையில் கூறுவதானால் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் பின்னடைவை மக்கள் மீது திணிப்பதற்கேயாகும்.

எல்லாத் தேசங்களிலும் ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கத்தை அடக்கிவைத்திருப்பது பலாத்காரத்தின் மூலமே. இதற்காக, ஆயுதம் தாங்கிய படைகள் முக்கிய அம்சமான ஒரு அரசு இயந்திரத்தினை உருவாக்கியிருக்கின்றனர். ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கி ஆளுவதற்கு உருவாக்கப்பட்ட இயந்திரமே அரசு. ஆளும் வர்க்கங்களின் காவல் நாய்களாக இயங்கும் ஆயுதம் தாங்கிய படைகளின் கைகளிலிருக்கும் துப்பாக்கிகளில்லாமல் ஒருகணமேனும் ஆளும் வர்க்கத்தால் ஆட்சி நடத்த முடியாது. ஆனபடியால்தான், "அரசியல் அதிகாரம் துப்பாக்கி முனையிலிருந்து பிறக்கிறது" என்று தலைவர் மாஓ-சே-துங் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில்தான், ஆளும் வர்க்கத்தின் பலாத்காரத்துக்கு எதிராக ஆளப்படும் வர்க்கம் எதிர்ப்பலாத்காரம் பாவிக்காமல் ஒரு பொழுதும் அரசியல் போராட்டம் வெற்றியடைய முடியாதென்று கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எப்பொழுதுமே கூறிவந்திருக்கின்றோம். அதாவது இன்றைக்கு எங்களை அடக்கிவரும் முதலாளித்துவ அரசியல் இயந்திரத்தை பலாத்காரத்தினால் தவிடுபொடியாக்காமலும், அதற்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயந்திரமாகிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்காமலும், தொழிலாளி வர்க்கத்துக்கும், அதனுடைய நேச சக்திகளுக்கும் விமோசனம் கிட்டாது. இந்த உண்மையை நாங்கள் நன்றாகக் கிரகித்துக்கொள்ள வேண்டும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் பலாத்காரத்தை பலாத்காரத்திற்காக விரும்புபவர்கள் அல்லர். இரத்தம் சிந்துவதைப் பார்க்க விரும்புபவர்களல்லர். இரத்தம் சிந்தாமல், பலாத்காரம் பாவிக்காமல் தொழிலாளி வர்க்கமும் அதனுடைய நேச சக்திகளும் ஆட்சி பீடம் ஏற முடியுமாய் இருந்தால் எங்களை விட சந்தோஷப்படக்கூடியவர்கள் வேறொருவரும் இருக்கமாட்டார்கள். ஆனால் அது வெறும் பகற்கனவு. அந்தப் பொய்யைப் பரப்புவதற்கு நாங்கள் தயாராய் இல்லை.

நாங்கள் இயற்கையின் விதிகளை கவனித்துப் பார்ப்போமானால் அதிலிருந்தும் பலாத்காரத்தை தவிர்க்க முடியாதென்பதைக் கற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளுவோம். உதாரணமாக ஒரு கோழிக்குஞ்சை எடுத்துக் கொள்வோம். கோழி முட்டையை அடைவைப்பதன் மூலமாக குஞ்சு பருவமடைகிறது. அது பருமடைந்த பின், தான், காந்தியின் சீடன் என்றும், அகிம்சா வாதத்தை கடைப்பிடிப்பவன் என்றும், அக் கோதிற்கு எதிராக பலாத்காரம் பாவித்துக் கொத்தாவிடில், அதற்கு என்ன ஆகும்? அது உள்ளேயே அவிந்து போகும். அதற்குப் பதிலாக, இயற்கை விதியின்படி அக் குஞ்சு முட்டைக் கோதிற்கு எதிராக பலாத்காரம் பாவித்து, அதைக் கொத்தி உடைத்துக் கொண்டே வெளியே வருகிறது. அக் கோதிற்கு எதிராக பலாத்காரம் பாவிக்க வேண்டும் என்ற விதியை அக் கோழிக் குஞ்சுக்கு சொல்லிக் கொடுத்தவர் யார்? தலைவர் மா ஓ சே துங் கா? அல்லது கார்ல் மாக்சா? இல்லை. இவர்கள் இருவருக்கும் முன்பாகவே அதாவது இயற்கையாகவே கோழிக் குஞ்சு கோதைக் கொத்திக் கொண்டு வெளியே வந்திருக்கிறது. இது ஒரு இயற்கை விதி. இதைப் போல வேறு பல உதாரணங்களையும் எடுத்துக் கூற முடியும். இதற்காகத்தான் "பழைய சமுதாயம் என்னும் கர்ப்பப் பைக்குள் உருவாயிருக்கும் ஒவ்வொரு புதிய சமுதாயத்திற்கும் மருத்துவச்சி பலாத்காரம்" என்று கார்ல் மாக்ஸ் கூறினர்.

சைவ சமயப் புராணக் கதைகளை எடுத்துப் பார்த்தாலும் அதர்மத்தை தர்மம் வெல்லுவதற்கு பலாத்காரமே காரணமாய் இருப்பதைக் காண்கின்றோம். அநேகமாக சைவ பக்தர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாத விஷயம் ஒன்றிருக்கிறது. அது என்னவெனில், அவர்கள் வழிபடும் பெரும்பாலான தெய்வங்களின் கைகளில் பலாத்காரத்திற்குப் பாவிக்கப்படும் ஆயுதங்கள் இருப்பதை அவதானிக்க முடியும். சிவன் கையில் சூலாயுதம் இருக்கின்றது, கிருஷ்ணன் கையில் சக்கராயுதம், முருகன் கையில் வேல், காளியின் கையில் கத்தி — இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

புராணக் கதைகளை எடுத்துப் பாருங்கள். கந்த புராண கதையின்படி முருகன் சூரர்களை வென்றது சத்தியாக் கிரகப் போராட்டத்தின் மூலமல்ல. வேல் மூலமாகத்தான் அவர் சூர சங்காரம் செய்தார். இராமாயணத்தில் இராவணனைக் கொன்றது இராம பாணம். மகா பாரதத்தில் பஞ்ச பாண்டவர்களுக்கு வெற்றி கொடுத்தது அர்ச்சுனனுக்கு சிவபெருமானால் வரமாகக் கொடுக்கப்பட்ட பாஸ்பதாஸ்திரம். மகா பாரதப் போர் தொடங்குவதற்கு முன்னர் பகவத் கீதையின் மூலமாக அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் போதிப்பதும் அதர்மத்திற்கு எதிராக, தர்மத்திற்கு சாதகமாக போராட வேண்டிய கடமையையே.



படிப்பகம்

www.padippakam.com

மகா கவி பாரதியார் பாடினுர், ''தனி மனிதனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம்''. இதைத்தான் நாங்கள் புரட்சி ஏன்று கூறுகின்றோம்.

அண்மையில் சிலி தேசத்தில் நடந்த எதிர்ப் புரட்சியின் வெற்றியிலிருந்தும், இந்தோ சீனுவில் அதன் மக்கள் உலகிலேயே மிகப்பெரிய ஏகாதிபத்திய வல்லரசாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை, போரில் தோற்கடித்ததிலிருந்தும், சோஷலிசத்திற்கு சமாதானப் பாதையென்று ஒன்று இல்லை என்பதை நாங்கள் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். ருஷ்ய ஒக்டோபர் புரட்சியும் சீனப் புரட்சியும் இதே பாடத்தைத் தான் உலகுக்கு வலியுறுத்துகின்றன.

அதே நேரத்தில் மார்க்ஸிஸ-லெனினிஸ்ட்டுகள் தனிப்பட்ட பயங்கர வாதத்தை ஒரு அரசியல் கருவியாகப் பாவிப்பதை எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கின்றனர். மார்க்ஸிஸ-லெனினிசம் தனிப்பட்ட பயங்கர வாதத்தை எதிர்க்கின்றது. ஏனெனில் ஒரு தனி மனிதனை அழிப்பதின் மூலமாக சமுதாயத்தை மாற்றிவிட முடியாது.

ஒரு கால கட்டத்தில் ருஸ்யாவில் போல்ஷிவிக் கட்சி உருவாக்குவதற்கு முன் தனிப்பட்ட பயங்கரவாதிகள் பல தடவை ஜார் மன்னனை கொல்லுவதற்கு சதி செய்தனர். ஒரு முறை வெற்றியும் கண்டனர். ஆனுல் ஜார் ஏதேச்சாதிகாரத்தை தோற்கடிக்க முடியவில்லை. இவ்விதமான ஒரு சதியில் ஈடுபட்டதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர் லெனினின் தமையனுன இலியனேவ் என்பவர். இச் சம்பவம் லெனினின் மேல் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. அவர் தமையனுரை மிகவும் நேசித்தார். அப்படியிருந்தும் அவர் திடமாகக் கூறினுர் ''இந்த வழி எமக்கு உகந்ததல்ல, வேறு வழிகளில் நாங்கள் வெற்றியைத் தேடவேண்டும்.''

இதனடிப்படையில்தான் போல்ஷிவிக் கட்சியைக் கட்டியெழுப்பி அதன் மூலமாக லட்சக்கணக்கான ருஷ்ய மக்களை அணிதிரட்டி, பலாத்காரப்புரட்சியின் மூலமாக ஜார் எதேச்சாதிகாரத்தைத் தோற்கடித்தார் லெனின். இதுதான் பலாத்காரத்தைப்பற்றி கம்யூனிஸ்டுகளின் கண்ணேட்டமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## ஆறுவது அத்தியாயம்

# மார்க்சிசமும் தேசிய இனப் பிரச்சினையும்

ஒரு கம்யூனிஸ்ட், வகுப்புவாதியாகவோ இனவாதியாகவோ ஒரு காலமும் இருக்க முடியாது. 1848-ம் வருடத்தில், மாக்ஸியத்தின் தந்தையர்களான மார்க்சும் ஏங்கல்சும் எழுதிய முதல் புத்தகமான, "கம்யூனிஸ்ட் பிரகடனத்தில்" பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "பாட்டாளி மக்களுக்குத் தேசம் என்று ஒன்று இல்லை." அதே புத்தகத்தில், அவர்கள் கூறுவது என்னவெனில், "மக்கள் மத்தியில் இருக்கும் தேசிய ஒற்றுமைகளும் முரண்பாடுகளும் நாளுக்கு நாள், வரவர குறைந்து கொண்டே போகின்றன", "தொழிலாளி வர்க்கம் ஆட்சி பீடத்திற்கு வந்ததற்குப் பின், இவை இன்னும் விரைவாக மறைந்துவிடும்".

அவர்கள் இவ்விதம் கூறுவதற்குக் காரணமும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவது என்னவெனில், "மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்த அளவிற்கு, ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தைச் சுரண்டுவதும் ஒழிக்கப்படும். ஒரு தேசிய இனத்திற்குள் இருக்கும் வர்க்க முரண்பாடுகள் மறையுமளவிற்கு, ஒரு தேசிய இனத்திற்கும் மற்றொரு தேசிய இனத்திற்கும் இடையில் இருக்கும் எதிர்ப்பும் முடிவடையும்." இதன் அர்த்தம் என்னவெனில் புரட்சியின் வெற்றியின் பின்னர், மனிதனை மனிதன் சுரண்டும் சமுதாயம் ஒழிக்கப்பட்டு, ஒரு சோஷலிச சமுதாயம் உருவாகியதன் பின்பே தேசிய இனப் பிரச்சினைக்கு முடிவானதொரு தீர்வுகாண முடியுமென்பதே.

மாக்ஸிய தலைவர்கள் தேசிய இனப் பிரச்சினையை அணுகும் பொழுது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியின் கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். லெனின் தேசிய இனப் பிரச்சினைக்கு புதிதாக சேர்த்துக்கொண்ட தத்துவங்களைப் பற்றி தோழர் ஸ்டாலின் பின்வருமாறு கூறுகின்றார்:

(1) ஏகாதிபத்திய யுகத்தில் உருவாகும் தேசிய காலனித்துவ புரட்சிகளைப் பற்றிய எண்ணங்களை ஏகோபித்த முறையில் லெனின் தொகுத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

(2) அவர் தேசிய, காலனித்துவ பிரச்சினையை ஏகாதிபத்தியத்தின் தோல்வியுடன் இணைத்தார்.

)3) அவர் தேசிய காலனித்துவ பிரச்சினை சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய பொதுப் பிரச்சினையில் ஒரு பங்கு அல்லது அம்சமென்று அறைகூவினார்.

இதன் மூலமாக இவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களென்றால், தேசிய இனப் பிரச்சினைக்காக நடத்தும் போராட்டம் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு வழிகோலக்கூடிய, அதன் வெற்றிக்கு உதவக்கூடிய வழியில் அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அது ஒரு பிற்போக்குத் தனமான நடவடிக்கையாகும். 1848-ல் ஏங்கல்ஸ் தேசிய சுய நிர்ணயம் என்ற முதலாளித்துவ ஜனநாயகக் கொள்கையை எதிர்த்தார். ஒரு ஐரோப்பிய யுத்தத்தின் மூலமாக சேர்ப்ஸ் (Serbs) இனத்தைச் சேர்ந்தவர்கள் தம் சுதந்திரத்தைப் பெறுவதை அவர் விரும்பவில்லை; அதற்குப் பதிலாக மேற்கு ஐரோப்பிய பாட்டாளி வர்க்கப் புரட்சி தங்களை விடுதலை செய்யுமட்டும் அவர்கள் அமைதியுடன் பொறுத்திருக்க வேண்டுமென்று கூறினார்; "மேற்கு ஐரோப்பாவின் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக நாங்கள் வேலை செய்ய வேண்டும். மற்ற எல்லாப் பிரச்சினைகளும் இரண்டாம் இடம் பெறவேண்டும். 1882-ம் வருடத்தில் அவர் ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு கூறியதாவது; தன்னைப் பொறுத்தவரையில், போல்கன் பிரதேசத்தில் வாழும் ஸ்லாவ்ஸ் (Slavs) மக்களின் சுதந்திரப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்தின் தேவைகளுடன் மோதினால், ஸ்லாவ்ஸ் மக்கள் எக்கேடு கெட்டாலும் தன்னைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளப்போவதில்லை" என்று கூறினார்.

மனிதனை மனிதன் சுரண்டுவதை எதிர்க்கும் மாக்ஸிய வாதிகள் இனம் இனத்தை சுரண்டுவதை ஒரு போதும் ஆதரிக்கப் போவதில்லை. ஆனால் இனப் போராட்டம் ஒரு போதும் வர்க்கப் போராட்டத்திற்கு தடையாகவோ முரணாகவோ வளரவிடக் கூடாதென்பதையே மாக்ஸிய தலைவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இப்பொழுது தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு சமஷ்டி முறையைப் பற்றி மாக்ஸிய தலைவர்கள் என்ன கூறினார்கள் என்பதையிட்டுச் சற்றுக் கவனிப்போம். அரசும் புரட்சியும் என்ற புத்தகத்தில், லெனின் இவ் விஷயத்தைப் பற்றி மாக்சும் ஏங்கல்சும் கொண்டிருந்த கருத்துக்களைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். "இந்தப் பிரச்சினையை பாட்டாளி வர்க்கத்தினதும் பாட்டாளி வர்க்கப் புரட்சியினதும் கண்ணோட்டத்திலிருந்து அணுகிய ஏங்கல்ஸ், மாக்ஸைப் போலவே, மத்தியஸ்த ஜனநாயகத்தை — பிளவு படாததும், ஒன்று



படிப்பகம்

www.padippakam.com

பட்டதுமான குடியரசு ஆட்சியை-ஆதரித்தார். அவர் ஒரு சமஷ்டி குடியரசை முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவோ அல்லது முடியாட்சியிலிருந்து மத்தியஸ்த குடியரசிற்கு மாறும் வழியாகவோ மாத்திரமே கருதினார். சில விசேஷ நிபந்தனையின் கீழ் மாத்திரமே இது முன்னேற்றத்திற்கு ஒரு வழியாகக் கருதினர். இந்த விசேஷ நிபந்தனைகளில் ஒன்றாக அவர் தேசியப் பிரச்சினையை குறிப்பிடுகிறார்.

சமஷ்டி முறையைப் பற்றி தன்னுடைய அபிப்பிராயங்களை 1913-ம் வருடம் நவம்பர் மாதம் எழுதிய ஒரு கடிதத்தில் லெனின் எடுத்துக் கூறியிருக்கின்றார். அக் கடிதத்தில் அவர் கூறியதாவது; "நாங்கள், ஒரு நிபந்தனையும் இல்லாமல், மத்தியஸ்த ஜனநாயகத்தையே ஆதரிக்கின்றோம். நாங்கள் சமஷ்டி முறையை எதிர்க்கின்றோம். நாங்கள் சமஷ்டி முறையை கொள்கை ரீதியில் எதிர்க்கின்றோம். ஏனெனில் அது பொருளாதாரத் தொடர்புகளை தளர்வடையச் செய்கின்றது. அது ஒரு அரசிற்குத் தகுதியற்றது."

அக்டோபர் புரட்சிக்குப் பின் மட்டுமே, அன்று நிலவிய விஷேச காரணங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ருஷ்யக் கம்யூனிஸ்ட்டுக்கள், பூரண ஒற்றுமை அடைவதற்கு ஒரு வழியாக சமஷ்டிமுறையை ஏற்றுக் கொண்டார்கள். இத் தீர்மானத்திற்கு மூன்று காரணங்களை தோழர் ஸ்டாலின் காட்டியுள்ளார். முதலாவது, அக்டோபர் புரட்சி நடந்த காலகட்டத்தில் ருஷ்யாவில் இருந்த பல தேசிய இனங்கள் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போகக்கூடிய நிலமை இருந்ததினால், சமஷ்டி முறை அதனிலும் பார்க்க முற்போக்காக இருந்தது. இரண்டாவதாக, அவர்கள் ஏற்றுக் கொண்ட சமஷ்டி முறை, தேசியஇனங்கள் மத்தியிலிருந்த தொழிலாளி வர்க்கங்களை பொருளாதார ரீதியில் ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்கு பாதகமாக இருக்கவில்லை. மூன்றாவதாக தேசிய இயக்கம் எண்ணியதிலும் பார்க்க மிகப் பாரதூரமான விஷயமாகவும், தேசிய இனங்களை ஒன்றிணைப்பது முன்பு எண்ணியிருந்ததிலும் பார்க்க கடினமாக இருந்தது என்பதுமாகும்.

சமஷ்டி முறையை ஆதரிக்காமல் இருந்த போதிலும், ஒடுக்கப்பட்ட தேசிய இனம் வேண்டுமானால் பிரிந்துபோய் அரசு அமைக்கும் சுய நிர்ணய உரிமையை லெனினும் ஸ்டாலினும் ஆதரித்தனர். ஆனால் அதுவும் நிபந்தனை இல்லாமல் ஆதரிக்கவில்லை. லெனின் ஒரு முறை எடுத்துக் காட்டியதுபோல் "விவாக ரத்து செய்ய உரிமை இருக்கின்றபடியினால் எல்லோரும் விவாக ரத்து செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை."

ஒக்டோபர் புரட்சி நடந்த காலகட்டத்தில் பின்லாந்து பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக் கொண்ட பொழுதிலும், அது நடைமுறை



படிப்பகம்

www.padippakam.com

யில் பிரிந்து போவதை போல்ஸ்விக் கட்சி எதிர்த்தது. அக்கால கட்டத்தில் பின்லாந்தில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியினதும் புரட்சிகர சக்திகளினதும் பலவீனமே பின்லாந்தில் உள்ள பிற்போக்கு தேசியவாதிகள் அத் தேசத்தை தனி நாடாக்க முடிந்ததற்கு காரணமாகும். இதற்குப் பின் சோவியத்தின் எந்த தேசிய இனமும் பிரிந்துபோவதை எதிர்த்து போல்சுவிக்கார் தடுத்தனர்.

இதனால் தான், ருஷ்யாவில் ஜனநாயகப் புரட்சி 1917-ம் வருடம் பெப்ரவரி மாதத்தில் வெற்றியடைந்ததின் பின் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பின்வரும் வழிகளை தோழர் ஸ்டாலின் முன் வைத்தார்:

(1) ஒன்றுபட்ட பொருளாதாரத்தைக் கொண்டதும் விசேஷ வாழ்க்கை முறைகளை கையாளுவதுமான தேசிய இனங்கள் வாழும் பிரதேசங்களுக்கு அரசியல் சுய ஆட்சியும் (சமஷ்டியல்ல), தங்களுடைய விவகாரங்களையும், கல்வியையும் தங்கள் மொழியிலேயே நடாத்துவதற்கு உரிமையும்;

(2) ஏது காரணத்திற்காகவோ ஒற்றையாட்சிக்குள் தங்கி நிற்க முடியாத தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவோ பிற்போக்கு சக்திகளுக்கு எதிராகவோ நடைபெற்ற தேசிய இனப் போராட்டங்களை கம்யூனிஸ்ட்டுக்கள் எப்பொழுதும் ஆதரித்து வந்திருக்கின்றனர். உதாரணமாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஐரிஸ் தேசியவாதிகள் போர் தொடுத்த போது மாக்சும் ஏங்கல்சும் ஐரிஸ் சுதந்திர இயக்கத்தை ஆதரித்தனர். ஆனால் அது ஒரு அடக்கப்பட்ட தேசிய இனம் தன்னை அடக்கியாளும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடத்திய போராட்டம். அந் நிலைமையை இன்று இலங்கையில் நிலவும் நிலைமையுடன் ஒப்பிட முடியாது. இதற்குக் காரணம், இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை சிங்கள மக்கள் ஆக்கிரமித்து படைப்பலத்தினால் அடக்கி ஆளவில்லை. ஆதலினால் அயர்லாந்தில் நடந்த தேசிய சுதந்திரப் போராட்டத்தையும், இலங்கையில் தமிழ் மக்கள் தங்களது நியாயமான கோரிக்கைக்காக நடத்தும் இயக்கத்தையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. காரணம் ஐரிஸ் இனத்தை நேரடியாக அடக்கி ஆண்டது பிரித்தானிய ஏகாதிபத்தியமேயாகும். ஆங்கிலேய - ஐரிஸ் பாட்டாளி வர்க்கத்தின், பொதுஎதிரி பிரித்தானிய ஏகாதிபத்தியமாகும். ஆனால் இலங்கையில் அந்நிய ஏகாதிபத்தியங்களின் பிடிப்பு இரு இனங்களையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தையும், ஏனைய உழைக்கும் மக்களையும் நசுக்கி வருகின்றது. எனவே எமது நாட்டின் இரு இன மக்களும் அந்நிய ஏகாதிபத்திய பிடிப்பக



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கும், அவற்றின் உள்ளூர் அடிவருடிகளுக்கும் எதிராக ஒரு தேசியப் போராட்டத்தில் இணைவது அவசியமாகும். இவ் அவசியத்தைத் திசை திருப்பி ஏகாதிபத்தியத்திற்கு உதவவே தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஏகாதிபத்தியம் என்ற அர்த்தமற்ற சொற்றொடரைப் பாவித்து தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுகின்றனர்.

அதே போலவே, 1905-ல் நோர்வே, ஸ்வீடனின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றபோது, லெனின் அந்த விடுதலை இயக்கத்தை ஆதரித்தார். அது மாத்திரமல்ல, அந்த இயக்கத்திலிருந்து ஒரு முக்கிய அம்சத்தையும் எடுத்துக் காட்டினார். நோர்வே தனி சுதந்திர நாடாகப் பிரிந்து போவதற்கிருந்த உரிமையை சுவீடனின் பாட்டாளி வர்க்கம் ஆதரித்ததே இப்பிரச்சினையில் இருந்த முக்கியத்துவம் என்று லெனின் சுட்டிக் காட்டினார். அதனால்தான் அவ்விரு நாடுகள் பிரிந்ததற்குப் பின்பும் சினேகித நாடுகளாக இருக்க முடிந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். இதிலிருந்து நாங்கள் படிக்க வேண்டிய பாடம் என்னவெனில் அடக்கப்படும் தேசிய இனம் தன்னை அடக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதின் முக்கியத்துவமே. இப் பிரச்சினை பற்றிக் குழப்பமுடையவர்களுக்கு நாம் நினைவூட்ட விரும்புவது என்னவெனில் நெப்போலிய யுத்த காலத்துக்கு முன் நோர்வே தனி சுதந்திர நாடாக இருந்ததென்றும், அதை சுவிடின் அடிமை நாடாக்கியது என்பதும், 1905-ம் ஆண்டில்தான் விடுதலை பெற்றது என்றும், ஆனால் இலங்கையைப் பற்றி பேசுவதாய் இருந்தால், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை சிங்களத் தொழிலாள விவசாயிகள் ஏற்றுக் கொள்ளும் நிலைமையில், வெற்றி காண்பது இலகுவாகிறது. இந்த ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கே கம்யூனிஸ்ட் கட்சி பாடுபட்டு வருகிறது.

இப்பொழுது தேசிய இனம் என்றால் என்ன என்ற விஷயத்தைத விவாதிப்போம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. இப் பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியில் மறுமொழி கொடுத்தவர் தோழர் ஸ்டாலினே. அவர், "மார்க்ஸியமும் தேசிய இனப் பிரச்சினையும்" என்னும் கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்: "பொது மொழியும், பொது பிரதேசமும், பொதுப் பொருளாதாரமும் பொதுக் கலாச்சாரமும் உள்ள, சரித்திர ரீதியில் உருவாக்கப்பட்ட, ஒரு ஸ்திரமான மக்கள் சமூகமே தேசிய இனம் எனப்படும்." அவர் அதே நேரத்தில் மேலும் கூறுவதாவது "இதில் அழுத்தமாகக் கூற வேண்டியது என்னவெனில் மேற்கூறப்பட்ட அம்சங்களில் ஒன்றை மாத்திரம் கொண்ட இனம் தேசிய இனமாகாது. அது மாத்திரமல்ல, மேற்கூறிய அம்சங்களில் ஒன்றுதானும் இல்லாது போனால் அத் தேசிய இனம் ஒரு தேசிய 'இனமாக கணிக்கப்படமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இதன் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமா என்பதை அலசிப் பார்ப்போம். இலங்கையின் சனத்தொகை இன்று கிட்டத்தட்ட ஒரு கோடி முப்பது லட்சமாகி விட்டது. இதில் இலங்கைத் தமிழர்கள் 14,15,167: இந்தியத் தமிழர்கள் 11,95,368. இந்தத் தொகையுடன் எட்டு இலட்சம் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் ஒருங்கிணைத்துத்தான் தமிழர் கூட்டணித் தலைவர்கள் இலங்கையிலிருக்கும் தமிழ் மக்களின் எண்ணிக்கை முப்பத்தைந்து இலட்சம் என்று கூறிவருகின்றனர். ஆனால் இது தவறு. இத் தமிழர்களில், இலங்கைத் தமிழர்கள், அதாவது 14 லட்சம் மாத்திரமே ஒரு பிரதேசத்தின், அதாவது வட, கிழக்குப் பகுதிகளில் ஒருமித்து வாழ்கின்றனர். மற்றப் 11 லட்சம் இந்திய தமிழர்களும் மலை நாட்டில், சிங்களவர் மத்தியிலே வாழ்கின்றனர்.

ஆனபடியினால் இலங்கையில் வசிக்கும் 25 லட்சம் தமிழர்களுக்கு ஒரு பொது மொழி இருந்தாலும், ஓரளவு தூரத்திற்கு ஒரு பொதுக் கலாச்சாரம் இருந்தாலும் (இது ஐயத்திற்கிடமான விடயம்), 14லட்சத்தினர் மாத்திரமே ஒரு பொதுப் பிரதேசத்தில் வசித்து வருகின்றனர். ஸ்டாலின் கூறிய மற்ற நிபந்தனையான பொதுப் பொருளாதாரம் இவர்கள் மத்தியில் இல்லை. இலங்கைத் தமிழர்களை மாத்திரம் எடுத்தாலுமே இவர்களில் ஒரு கணிசமான தொகையினர் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்காக வேலை தேடி வெளிநாடுகளுக்கோ தென் இலங்கைக்கோ செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருக்கின்றனர். அண்மையில் நாம், ஏற்கனவே கூறியிருப்பதுபோல், விவசாய அபிவிருத்தியின் மூலமாக ஒரு பணக்கார வர்க்கம் வட பகுதியில் உருவாகி வருகிறது. ஆனபடியினால் இலங்கையில் வசிக்கும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் தேசிய இனமென்று கூறப்படும் நிலைக்கு இன்னும் வளராவிட்டாலும், அவர்கள் அந்நிலையை அடைவதற்கு வளர்ந்து கொண்டு வருகிறார்கள் என்று கூறமுடியும். ஆனதினால்தான் தேசிய சுய நிர்ணய உரிமையோ அல்லது தனித்து நின்று ஆளும் உரிமையோ உரிமையாகக் கோரக்கூடிய நிலையில் இல்லாது இருக்கின்றனர்.

இப்பொழுது, சோஷலிஸ்ட் சமுதாயத்தில் ஒற்றை ஆட்சியின் கீழ் தேசிய இனப் பிரச்சினை என்ன விதமாக. தீர்க்கப் பட்டிருக்கிறதென்பதை அறிவதற்கு சீனாவில் இருந்து உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். சீனா ஒற்றுமைப்பட்ட, பல தேசிய இனங்கள் வாழும் ஒரு சோஷலிஸ்ட் நாடு.

சீனாவில் 55 தேசிய இனங்கள் வசிக்கின்றனர். ஆனால் இவர்கள் எல்லோருமே சீனாவின் சனத்தொகையில் நூற்றில் ஆறு பங்கினர் மாத்திரமே. எஞ்சியவர்கள் ஹான் (HAN) இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் சீனாவின் தேசிய இனங்கள் அப் பூமிப் பிரமாணத்தின் நூற்றுக்கு ஐம்பதற்கும் அறுபதுக்கும் இடையில் பெருமளவு பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். விடுதலைக்கு முன், எல்லாத் தேசிய இனங்களையும், ஏகாதிபத்தியவாதிகளின் ஒத்துழைப்புடன், கோமின் தாங் பிற்போக்கு வாதிகளால் அடக்கப்பட்டு வந்தனர். ஏகாதிபத்தியத்தினதும் கோமிங் தாங்கினதும் பிற்போக்கு ஆட்சியைத் தூக்கி எறிவதற்கு தலைவர் மாவோவின் தலைமையின் கீழ் நடந்த போராட்டத்தை எல்லாத் தேசிய இனங்களுமே ஆதரித்தனர்.

புரட்சிக்குப் பின், சீனாவில் வாழும் எல்லாத் தேசிய இனங்களும் சம்பூர்ண சம தத்துவத்தில் வாழ்கின்றனர். சீனா இன்று பெரும்பான்மை ஹான் வகுப்பு வாதத்தையும் சிறுபான்மை தேசியத்தையும் எதிர்க்கிறது. சிறு பான்மை தேசிய இனங்கள் ஒருமித்து வாழும் சமூகங்கள் இருக்கும் பிரதேசங்களில் அவர்களுக்கு பிரதேச சுய ஆட்சி அளிக்கப்பட்டிருக்கின்றது. சீனாவில் இவ்விதமான சுய ஆட்சிப் பிரதேசங்கள் ஐந்து இருக்கின்றன. உதாரணங்கள்: திபேத், மொங்கோலியா, சிங்கியாங் போன்றவை. இப் பிரதேசங்களில், மத்திய அரசாங்கத் தலைமையின் கீழ், எல்லா மட்டங்களிலும் மக்கள் சுய ஆட்சியை அனுபவிக்கின்றனர். இதன் அர்த்தம் என்னவென்றால், சீன மக்கள் குடியரசின் சட்ட திட்டத்திற்கு உட்பட, தங்கள் பிரதேசத்து நிதிகளை நிர்வகிக்கவும், உள்நாட்டு தேர்தலைப் பற்றியும் வரிமுறைகளைப் பற்றியும் அப்பிரதேசத்தின் நிலைமைக்கு ஏற்ப சட்டங்கள் விதிக்க உரிமையுண்டு. ஏனைய பகுதிகளில் வாழும் சிறுபான்மை மக்கள் அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அனுபவிக்கும் அதே ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கின்றனர்.

இதில் இன்னும் ஒரு முக்கிய பிரச்சினை தங்கியிருக்கிறது. சோஷலிச சமுதாயத்தின் கீழ், தொழிலாளி வர்க்க தலைமையின் கீழ் உருவாகியிருக்கும் ஆட்சியின் கீழ் பின் தங்கியுள்ள சிறுபான்மை மக்களுக்கு முன்னேறுவதற்காக பல விஷேட சலுகைகளை மத்திய அரசாங்கம் செய்கின்றது. உதாரணமாக திபெத் பிரதேசம் அடிமைச்சமுதாயத்திலிருந்து ஒரே பாய்ச்சலில் சோஷலிச சமுதாயத்தை அடைந்து விட்டது. தொழிலாளி வர்க்கமே இல்லாமல் இருந்த இப்பிரதேசத்தில், இன்று நவீன கைத்தொழில் அபிவிருத்தியின் காரணமாக, சனத்தொகையின் நூற்றுக்கு நாற்பத்தியாறு வீதம் தொழிலாளராக மாறிவிட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

சில தேசிய இனங்களின் சனத்தொகை சில ஆயிரக் கணக்கானவர்களாகவே இருக்கின்றனர். ஒரு தேசிய இனத்தில் சில நூற்றுக்கணக்கானவர்கள் மாத்திரமே இருக்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் தாங்கள் ஒருமித்து வசிக்கும் பிரதேசங்களில் சுய ஆட்சி உரிமையை அனுபவிக்கின்றனர். ஆனால் எல்லோரும் மக்கள் சீனாவின் ஒற்றை ஆட்சியின் கீழ் தான் வாழ்கின்றனர்.

இந்த உதாரணத்தின் அடிப்படையில் தான், இலங்கையில் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றியடைந்த பின், தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் ஒரு புரட்சிகர அரசாங்கம் உருவாகிய நிலைமையின் கீழ், தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதேச சுய ஆட்சியை ஒரு வழியாக கம்யூனிஸ்ட் கட்சி முன் வைக்கின்றது.

இதை விட வேறு வழி இல்லை. அதே போல குறுக்கு வழியும் கிடையாது. சிலர், புரட்சி வெற்றியடையும் மட்டும் காத்திருக்க முடியாது. அதற்கிடையில் தமிழினம் அழிந்து போகும் என்ற அபிப்பிராயங்களை முன் வைத்திருக்கின்றனர். இது தவறான கண்ணோட்டம். பல நூற்றுக் கணக்கான வருடங்களுக்கு அந்நியரின் ஆட்சிக்கு அடிமைப் பட்டிருந்தும் அழிக்கப்படாத தமிழினம் ஒரு சில வருட காலத்திற்குள் அழிந்து விடும் என்று கூறுவது அர்த்தமற்றது. தமிழர்களின் நியாயமான உரிமைகளை கூடிய விரைவில் பெற விரும்புபவர்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் புரட்சிகர சக்திகளுடன் ஒற்றுமைப்பட்டு, ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பெருமுதலாளித்துவத்திற்கும் எதிராக நடக்கவிருக்கும் புரட்சியை கூடிய சீக்கிரம் வெற்றி பெறச் செய்வதின் மூலம் மாத்திரமே தங்களுடைய இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண முடியும்.

இதற்குப் பதிலாக இப்புரட்சிக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய முறையில், முக்கிய முரண்பாடாகிய ஏகாதிபத்தியத்திற்கும் சிங்கள-தமிழ் மக்களுக்கும் இடையில் இருக்கும் முரண்பாட்டை பின் தள்ளி தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே இருக்கும் இரண்டாம் தரமான முரண்பாட்டை முன் தள்ளுவதன் மூலமாக, தமிழ் மக்கள் தங்களுக்கே பாதகம் விளைவித்துக் கொள்வார்கள். இதையே பிற்போக்கு வாதிகளும் விரும்புகின்றார்கள். வர்க்கப் போராட்டத்தை முறி



படிப்பகம்

www.padippakam.com

யடிப்பதற்கும் திசை திருப்புவதற்கும் இனக் கலவரத்தைப் போன்ற நல்ல ஆயுதம் கிடையாது. இதை 1958 ம் வருட இனக்கலவரம் நடந்த பொழுது நாங்கள் நன்ருகக் கண்டோம். இன்னெரு முறை இவ்வலைக்குள் நாங்கள் சிக்கிவிடக் கூடாது.

இறுதியாக கம்யூனிஸ்ட் கட்சி கூறுவது இதுதான். எங்களுடைய முக்கிய எதிரி யார்? நண்பர்கள் யார் என்பதை தவறற்றுக் கணித்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் எங்களுக்கு முன்னுல் இருக்கும் முக்கிய முரண்பாடு என்ன என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். முக்கிய முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு பாதகம் விளைவிக்கும் வழியில் இரண்டாம் தர முரண்பாடுகளை முன்னேறவிடக் கூடாது. அதே நேரத்தில் எதிரிக்கு எதிராக பாவிக்க வேண்டிய வழி வகைகளையும் உபாயதந்திரங்களையும் சரியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வேறு விதத்தில் சொன்னுல், இன்று தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பொது எதிரியாக இருப்பவர்கள் அந்நிய ஏகாதிபத்தியங்களும், உள்நாட்டு நிலப்பிரபுக்களும், சிங்கள-தமிழ் பெரு முதலாளி வர்க்கமுமே. எங்களுக்கு முன்னுல் இருக்கும் முக்கிய முரண்பாடு, ஒரு பக்கத்தில் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் பெருமுதலாளித்துவத்திற்கும் மறு பக்கத்தில், இத்தேசத்தில் வசிக்கும் எல்லாச் சாதாரண மக்களுக்குமிடையே உள்ள முரண்பாடே. இதன் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் புரட்சிகர சக்திகளாகிய, தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், வாலிபர்கள், தேசபக்தர்கள் ஆகியோரின் உண்மையான நண்பர்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் இதே போன்ற புரட்சிகர சக்திகளே. இவ்விரு பகுதியினருக்கும் பொதுப் பிரச்சினைகளும் பொது நலன்களும் இருக்கின்றன. அதன் அடிப்படையில் இவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

எங்கள் பொது எதிரிகளைத் தோற்கடிப்பதற்கு அவர்களுக்கு எதிராக ஒற்றுமைப்படுத்தக் கூடிய சகல சக்திகளையும், இன பேதமின்றி, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒற்றுமைப் படுத்துவதே சரியான உபாயதந்திரம். அதே நேரத்தில் 44 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் பாவிக்கப்பட்டும், ஒரு விதமான பலனையும் தராத பாராளுமன்ற ஜனநாயக பாதையை நிராகரிக்க வேண்டும். அதற்குப் பதிலாக மாக்ஸிச-லெனினிச-மாசேதுங் சிந்தனை ஒளிமயமாக்கும் புரட்சிகரப்



படிப்பகம்

www.padippakam.com

பாதையை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அதன் மூலமாக மாத்திரமே புதிய ஜனநாயகப் புரட்சி இலங்கையில் வெற்றியடையும். அதன் அடிப்படையில் மாத்திரமே தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி தோன்றும். தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் இன அடக்குமுறையாலும், தமிழ்த் தலைவர்களின் சமாதான பாராளுமன்றப் பாதையின் பிற்போக்குத் தனத்தாலும் விரக்தியடைந்து மேலும் மேலும் பிற்போக்குத் தனமான பிரிவினைப் பாதையில் இழுபட முயற்சிக்கும் தமிழ் பேசும் வாலிபர்களுக்கு மேற்கண்ட தீர்வையே கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக்கின்றது. தனியாக வாலிபர்கள் இன ரீதியில் ஒன்று சேர்ந்தோ அல்லது குறுக்கு வழிகளில் இன விடுதலை தேட முயற்சிப்பதோ முட்டாள்த்தனமானதாகும். அதற்குப் பதிலாக தொழிலாளி - விவசாயி - மற்றும் உழைக்கும் மக்கள் என்னும் வர்க்க அடிப்படையில் தேசிய விடுதலைக்கான சரியான போராட்டப் பாதையில் செல்வதாலேயே விமோசனம் பெற முடியும். இதுவே கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களுக்கு காட்டும் புரட்சிகரப் பாதையாகும்.

★ ★ ★


எம்து அடுத்த வெளியீடு!

**மாக்சிசப் பார்வையில்**

# இலங்கைச் சரித்திரம்

**எழுதியவர்: நா. சண்முகதாசன்**

★ ★ ★

**விற்பனையாகிறது!**

**அரசு பற்றிய மாக்சிசக் கோட்பாடு**

எழுதியவர்: நா. சண்முகதாசன்

விலை சதம் 50


படிப்பகம்

www.padippakam.com

மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின்,
மாஒ-சேதுங், அன்வர் ஹோசா
ஆகியோரின் படைப்புகள்,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடுகள்,
தோழர் சண் எழுதிய புத்தகங்கள்
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

## எமது புத்தக நிலையங்களுக்கு வருகை தாருங்கள்.

சீன, அல்பேனிய சஞ்சிகைகளுக்கு
சந்தாக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு — முற்போக்கு பிரசுராலயம்
9, டிமெல் வீதி, கொழும்பு-2.

யாழ்ப்பாணம் — வசந்தம் புத்தக நிலையம்
15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இரத்தினபுரி — மக்கள் புத்தக நிலையம்
சந்தைக் கட்டிடம், இரத்தினபுரி.

அட்டன் — மக்கள் புத்தக நிலையம்
133-1/1, டிம்புல வீதி, அட்டன்.

இலங்கை தொழிலாளி வர்க்கத்தின்
புரட்சிகர இதழ்

## தொழிலாளி

தொடர்ந்து வாசியுங்கள்.

யாழ்ப்பாண அச்சகம், 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
படிப்பகம்